
"அன்பு அறிவு அகமகிழ்வோடு
இன்புற்றிருப்போம் எல்லோரும்"

# சுவீந்தரன்

கலை, இலக்கிய, சமூக ஏடு
மலர் - 3 - 1998 ஆனி முழுமதி



ஒருவர்: வட்டிக்காரன்ட
ஆய்க்கினை
தாங்கேலாம மனுசன்
தூங்கிச் செத்துப்
போச்சு.


மற்றவர்: அதுசரி இப்படி அழுகிறார்;
அண்ணன் தம்பியோ?

ஒருவர்: ச்சே... அவர்தான் வட்டிக்கு காசு கொடுத்தவர்.

ராஜா:- சரியான நேரம் கேட்டால், மந்திரியாரே எங்கே ஓடுகிறீர்?

மந்திரி:- யாழ்ப்பாணத்தில் அல்டிக்கு ஓடுகிறேன் அங்குதான் தரமான மணிக்கூடுகள் உண்டு.

# ALDI




# அல்டி

*Wrist watches, Table, Wall clocks, Electronics, Batteries.*

75, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**75, Grand Bazaar Road,
Jaffna.**

-கோபி-
(19/06)

# தீக்குளிப்பு

- த. ஜெயசீலன் -

நீரில் குளித்தெழுந்தால் தூயதாகும் உடல்; எனினும்
மீண்டும் அழுக்காகும்.
ஆனாலோ... சுடுநெருப்பில்...
குளித்தெழுந்தால் நெஞ்சம் கொடுமைகளை எதிர்த்து வெல்லத்
துணிவு பெறும்!
உடலோ 'புத்துயிர்த்து' நிமிர்ந்து நிற்கத்
தினவு பெறும்!
பொன்னும் தீக்குளித்தால்தானே புது
மினுக்கமுறும்.
அதனால் சீண்டவரும் துயர்நெருப்பில்
குளியுங்கள் வெற்றி குலையாது.
அதில் தோன்றும்
எழுச்சி... இயமனுக்கும் கைகட்டி நிற்காது.



# இருட்டைக் கலைக்கும் விளக்கின் வெளிச்சத்தில் எழுதிய கவிதை

சூழ்ந்திருக்கும் இருட்டையெல்லாம் தின்று... என் கண்
சுடர ஒளி கொடுத்து, எதையும் பார்க்க வைத்து,
பாழிரவின் முகத்திரையைக் கிழித்து... நானும்
பகுத்தறிய வைத்ததிந்த விளக்கின் தீபம்!
வாழ்த்தி இதை வளர்த்துவிட்டால் 'பயங்கள் சூழ்ந்த
இரவழியும்' வரை அதுவே என்னைக் காக்கும்.
தூண்ட... அதன் ஒளியில் பல 'கருமம்' ஆகும்.
சுடர் அணைந்தால் இருள் என்னைக் குருடன் ஆக்கும்.

நீளுமிந்த இரவிருளுள் விளக்கில் லாட்டி
நிச்சயமாய்க் கஷ்டந்தான்; அறிவேன்! காற்று
வீசியிதை அணைக்காமல்... 'கையால் பொத்திக்
காக்கவேணும்' உணர்ந்தேன் யான்! அதனை விட்டு
மூண்ட விளக்கின் சுடரை விளையாட்டாகத்
தொட்டுவிட்டு சுட்டதென்று குளற மாட்டேன்.
நீளுகிற கொடும் இருளைக் கலைக்கும்... லாம்பின்
வெளிச்சத்தில் நாளைக்காய் கவிதை யாத்தேன்.

# சுந்தரன்

கலை, இலக்கிய, சமூக
மாதாந்த ஏடு.

252, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இதழ் 3
15 - 06 - 1998

நெறியாள்கை:

சொக்கன்
சிவராமலிங்கம்
செங்கை ஆழியான்

ஓவியம்:

ரமணி

இணை ஆசிரியர்:

த. ஜெயசீலன்

ஆசிரியர்:


கௌதமன்

வெளியீடு:

போஸ்கோ பதிப்பகம்
252, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

விலை: **15/-**

பத்தொன்பது வயது நிரம்பிய யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சு. பிரதீப்பின் கற்பனையில் உதித்த கருத்தும், அவரது கைவண்ணமும் இங்கே கேலிச்சித்திரமாகக் கீழே தந்துள்ளோம். அவரது திறமைக்கு சுந்தரனின் பாராட்டுக்கள்! எதிர்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துக்கள்!




ஒருவர்:

உந்தப் 'பெடிசுகள்' எல்லாம்
என்னத்தை வைச்சு சுரண்டுதுகள்?

சி. கு:

எங்கட சனத்தின்ர காசைச்
'சுரண்டுறத்'துக்கெண்டே யாழ்ப்பாணம்
வந்திருக்கிற லொத்தரைத்தான் அவை
சுரண்டுகினம்!



# மனிதத்தை களைந்துவிட்டு...

மனிதனைத்தவிர
மனிதத்தின் சாயல்
எல்லா மிருகத்திடமும் இருக்கிறது!
ஆனாலும் – மனிதம்பற்றி
மானிடம்தான் அதிகம் பேசுகிறது.

● ● ●

மயிர்நீவி, குளிப்பாட்டி
மடிகிடத்தி வளர்த்தெடுத்தது,
கழுத்தறுந்து துடிதுடிக்க
சீறிப்பாயும் இரத்தம்
நிலம் நனைக்கும்!
வளர்த்தவன் முகம் நனைக்கும்!
அவனது உடல்
பூரிப்பில் புல்லரிக்கும்!
இந்தக் கொடும்பாவி மனதுகண்டு
மிருகம் சிரிக்கிறது
மனிதனின் மனிதம்பார்த்து!

● ● ●

வைக்கல் கற்றையால்
வயிற்றை நிரப்பி
செத்த கன்றை பசுவுக்குக்காட்டி
தாயின் அன்பை
வேசத்தால் கறக்கும்
மோசமனிதனின் பாசம் நினைத்து
மாடு சிரிக்கிறது
மனிதனின் மனிதம் பார்த்து!

● ● ●

உடல் தேய்ந்து உயிருருக்கி
உதிரம் ஈய்ந்து காத்தவள்
பசியில் எரிந்து மனமும்வெந்து
படுக்கையில் சீவன் துடிக்கையில்
சுடலை நிமிஷம் கணித்து
சொத்துப்பறிக்கும்
பத்திரம்மேலே - அவள்
கட்டைவிரல் பதிக்க
பறந்துவரும் பிள்ளைகண்டு,

வீசி எறிந்த மிச்சச்சோற்றை
விழுங்கித்தின்ற நன்றி காக்க
எச்சில்சோற்றின் எசமான் சாக
வாசலோரமாய் வாடிக்கிடக்கும்
நாய் சிரிக்கிறது
மனிதனின் மனிதம் பார்த்து!

● ● ●

கூடித்திரிந்து தோள்கைபோட்டு
நயம்பேசி நாக்கு நனைத்த
நண்பன் வீட்டில்
கொள்ளி சொருகும்
குள்ளம் கண்டு,

சேர்ந்து வாழ்ந்துததில் ஒன்று
செத்துப்போனது கண்டு
காடே அதிரக் கதறிஅழும்
நரி சிரிக்கிறது
மனிதனின் மனிதம் கேட்டு!

● ● ●

பாடுபட்டு வளர்த்த மண்
எக்கேடுகெட்டும் போகவென்று
நாடுவிட்டு நாடுஓடும்
நல்ல நல்ல மனிதர் பார்த்து;

கோடிமைல்கள்
கடந்து சென்றும் - தன்
கூடுவந்து சேரும்
குருவிக் கூட்டம் சிரிக்கிறது
மனிதா உன் மனிதம் கேட்டு!

● ● ●

உடைகளைக் களைந்துவிட்டு
அலைபவன்
பைத்தியக்காரனாகத்தான்
இருக்க வேண்டும்!
மனிதத்தை
களைந்துவிட்ட மனிதன்
..................?

# குப்பை

**இன்று** நான்காம் சடங்கு .. சித்திரன் வேலைக்குப் போய்விட்டான். எப்படியும் ஐந்து மணிக்கு முன் வந்துவிடுவான். ஒவ்வொரு கணமும் அன்றைய முதலிரவின் ஞாபகம் அவளைக் கொன்றுகொண்டே இருந்தது.

ஒருவேளை இன்று அவனாக அவளிடம் கேட்கலாம்... ''எனது வாழ்வில் நடந்ததுபோல் ஏதாவது தவறுகள் உன்வாழ்விலும் நடந்ததுண்டா?'' என்று கேட்டுவிட்டால்... ..?

அன்று மத்தியானம் சாப்பிடவும் முடியவில்லை! நேரம் செல்லச் செல்ல இந்திக்கு மனம் நிம்மதியில்லாமல் தவித்துக்கொண்டிருந்தது...

தனது கணவனின் வரவை வெளிஹோலின் ஜன்னல்வழியாக பார்த்துக்கொண்டு நின்றாள்.

சொல்லத்தான் வேண்டும். எப்படிச் சொல்வது? கலியாணம் முடிந்து நாலு நாட்கள்தான் ஆகிறது. எதையும் சொல்லலாம், ஆனால் ஒரு மனைவி கணவனிடம் இதை எப்படிச் சொல்வது; இந்த நாலுநாள் பழக்கத்தில் ...

சொல்லாமலிருப்பதும் துரோகமல்லவா? ஒரு கணவன் மனைவிக்கிடையில் ஒழிவு, மறைவு இருப்பது என்பது எவ்வளவு கொடுமையானது. ச்சே... அவர் எவ்வளவு நல்லவர்...

முதலிரவன்று... சித்திரன் நடந்துகொண்ட விதம்...... அவள் மனதைக் குடைந்து கொண்டிருந்தது...

''இந்தி—... இப்போது நாம் கணவன் மனைவி... எந்த உறவுகளுக்கிடையிலும் இல்லாத நெருக்கம் இந்த உறவில். மிக நீண்டு இறுதிவரை தொடரும்... எந்த இடைவெளிகளும் கிடையாது. ஒழிவு மறைவுகளும் இருக்கக் கூடாது. இவ்வளவு காலமும் நானும் நீயும் இரண்டாக இருந்தோம்... ஒன்றும் ஒன்றும் இரண்டு என்ற கணக்கின் தத்துவமே வேறு. இங்கு ஒன்றும் ஒன்றும் 'ஒன்று' என்று சொல்லிவிட்டு இந்தியை சித்திரன் புன்னகையோடு பார்த்த, அந்தப் பேச்சும் பார்வையும்...

இன்னும் இந்தியை ஏதோ செய்துகொண்டிருந்தது...

''நான் இதுவரை செய்த தவறுகள் நல்லவைகள், கெட்டவைகள் என்று எல்லாவற்றையும் உன்னிடம் சொல்லிவிடுகிறன். அறியாத இளம்துடிப்பில் நான் செய்த தவறுகள் சில உண்டு. அதை மறைப்பது நான் உனக்குச் செய்யும் துரோகம்.''

இந்திக்கு நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. அடுத்து என்ன சொல்லப்போகிறானோ என்பதில் அவள் கவனம் எல்லாம் ஒன்று சேர்ந்தது. அவன் முகத்தை விழித்து, 'ஒன்றும் விளங்கவில்லையே...!' என்பதுபோல் பார்த்தாள்.

''நான் கம்பஸில் படிக்கும்போது... என்னுடன் படித்த வித்தியா என்ற பெண்ணை விரும்பினேன்.''

இந்திக்கு பதட்டம் கூடியது... கண்ணைக் கொஞ்சம் நிமிர்த்தி அவன் அடுத்துச் சொல்லப் போவதை அவதானமாகக் கேட்பதற்கு ஆயத்தமானாள்...

''மிக நெருக்கமாக மூன்று வருடங்கள் பழகினோம். கம்பஸ்விட்டு வெளியேறியதும் எமக்குள் இருந்த இடைவெளி கூடிவிட்டது... அவளைச் சந்திப்பதே கஸ்டமாகிவிட்டது... நான் பலமுறை முயற்சி செய்தன். அவள் வசதியான குடும்பத்துப் பெண்... ஒரு வருடத்திற்குபின் அறிஞ்சன், அவள் திருமணம் செய்துகொண்டு பிரான்ஸ் போனதாக... கொஞ்சநாள் மனவேதனையோடுதான் அலைந்தன்... பின்பு வீட்டுப் பிரச்சினை... வேலைப் பிரச்சினை... என்று ஒரேயடியாக என்னைத் தாக்க, கொஞ்சம் கொஞ்சமாக மறந்து போய்விட்டன்... இப்போது அதை ஒரு கனவாகத்தான் நினைக்கிறன்''

.....................



**- சந்திரவாணி**

''நீ இதைத் தவறு என்று நினைத்தாலும் என்மனைவி என்ற தானத்தில் உன்னிடம் எதையும் மறைக்கக் கூடாது என்பதற்காக என் மனதிலிருந்த ஒரு குறையை உன்னிடம் கொட்டித் தீர்த்துவிட்டன். நீ இதைத் தவறு என்று நினைத்தால் மன்னித்துவிடு... இதோடு இதனை மறந்தும் விடு...''

கழுவாய் தேடியது போல் சொல்லி முடித்துவிட்டுப் பதிலுக்கு இந்தி என்ன சொல்வாளோ என்று அவளது முகத்தைப் பார்த்தான் சித்திரன்...

சிறிது நேரம் இருவருக்கிடையில் ஒரு பூரண அமைதி .. எவரும் எதுவும் பேசவில்லை. இந்தியின் வாயசைவினை அவதானித்துக் கொண்டிருந்தான் சித்திரன் ..

மெதுவாக வர்யசைந்தது ..

''ஒழிவு மறைவில்லாமல் சொல்கிறீர்கள்... அதுபோதும் வெளிநரட்டில் திருமணம் முடித்து, பிள்ளையும் பெத்துவிட்டு, இங்குவந்து நல்லவன் போல் சீதனத்தோடு இன்னொரு கலியாணம் முடிக்கும் ஆண்கள் நிரம்பிக்கிடக்கினம்... நீங்கள் எவ்வளவு உத்தமர்''

இந்தியின் வாயிலிருந்து வந்த அந்த கடைசி நிமிட வார்த்தைகள்... சித்திரனுக்கு பெரும் ஆறுதலாக இருந்தது.

ஆனர்ல் அதுமட்டுமல்ல''' அவளது வார்த்தைகளில் இன்னும் கொஞ்சம் அதிகமாகவே அவன் எதிர்பார்த்தான். அவள் தனது இளமைக் காலத்தில் என்ன தவறுகள் செய்தாளோ, அதை அறியும் துடிப்பு அவனுக்கும் இருந்தது. இருந்தாலும் அதைக் கேட்பது நாகரீகமில்லை என்று விட்டுவிட்டான். அவன் எதிர்பார்த்தது அதுதான் என்று இந்திக்கு தெரிந்திருந்தது. ஆனாலும் மெளனமாக இருந்து விட்டாள்.

'ஆண் தன் தவறுகளை சாதாரணமாக ஒத்துக் கொள்ளலாம் ஒத்துக்கொண்டாலும் அதைப் பெரும் தவறுகளாக சமூகம் எடுப்பதில்லை. ஆனால் நான் பெண்.. எப்படிச் சொல்வது? முதன்முதலாக நாம் சந்திக்கும் வர்ழ்வின் முதல்நாள்..., இன்றே எப்படி சொல்லி விடுவது... ஆனால் சொ‌ர்ல்லாமல் இருப்பது துரோகம் அல்லவா?'

இந்தியின் மனம் தவித்துக் கொண்டார்லும், அவளால் அந்த புதிய முதல் சந்திப்பில் தன் கணவனர்க இருந்தாலும் கூட அவளால் எதுவும் சொல்ல முடியவில்லை.

இந்திக்கு இருபத்தைந்து வயதிருக்கும், சாதாரண பொது நிறம்தான் .. கன்னம் இரண்டும் கொழுகொழுவென்று... அவள் அசையும் போதெல்லாம் அவையும் துள்ளித் துள்ளி விழும். விழித்துப் பார்ப்பதுபோல் கண்கள் கொஞ்சம் விரிந்திருக்கும் . சற்றுப் பருமனாக உடலமைப்பு என்றாலும் துடிப்பு நிறைந்த மிடுக்கான தோற்றம்... அழகுக் குறையாக தெரியவில்லை. பர்தங்களை நேராக வைத்து நடக்கும் போது– நிமிர்ந்த நேரிய பார்வை பாரதியின் புதுமைப் பெண்ணைக் கண்முன் கொண்டு வரும்

கட்டிலின் ஒருபக்கமாக அமர்ந்திருந்த இந்தியின் கைவிரல்களை மெதுவாக தீண்டினான் சித்திரன் முழுவதுமாக விரல்கள் அவன்

கைக்குள் அகப்படுகின்ற கூச்சத்தில் இழுத்துக் கொண்டாள் இந்தி...

சித்திரன் மெல்லச் சிரித்தபடி அவள் அருகில் கொஞ்சம் நெருங்கி வந்தான்.. அவள் தள்ளிப் போகவில்லை...

இருந்தபடி நன்றாக வளைந்து தன்மடியிலேயே தலையைப் புதைத்துக் கொண்டு எதுவும் செய்ய முடியாமல், வெட்கமும் தாக்க.. வியர்த்துக் கொட்டியது அவளுக்கு.

சித்திரன் நெருங்கி வந்து அவளை அப்படியே முதுகுப்பக்கமாக அணைத்தான் .அவள் தடுக்கவில்லை. அவனுக்குத்தான் அதற்கு பூரண உரிமையுண்டே.

● ● ●

''என்னடி இந்தி கடும் யோசனை, மனுசனைக் காணேல.. ஜன்னலால தூது விடுறியோ...?''

திடுக்கிட்டவளாய்த் திரும்பினாள் இந்தி ''அட! செல்வி, வா வா.. என்று வரவேற்றாள்

''பாத்தியா நீ என்ர கலியாணத்திற்கு வரேல்லைத்தானே; எவ்வளவு நாள் சிநேகிதம்... உன்னைப் பார்த்துக்கொண்டே இருந்தனான் கடசி இன்று நாலாம்நாள்த் தான் வந்திருக்கிறாய் உனக்கு என்னில ஏதோ கோபம்...!''

''ச்சீ... பைத்தியமே, உன்னைவிட்டால் சிநேகிதி என்று சொல்ல எனக்கு யார் இருக்கினம் என்ர மனஆறுதலுக்கு இப்போது நீ மட்டுந்தானே இருக்கிறாய். நான் அப்படியெல்லாம் வேண்டுமென்று வராமல் விடவில்லை. உனக்குத்தான் தெரியுமே..., என்பெயர் தான் செல்வி, ஆனால் வாழாவெட்டி..., புரிசனால் கைவிடப்பட்டவள்..., கலியாண வீட்டுக்கெல்லாம் நான் போவதில்லை.''

வேதனை சொற்களில் புதைந்து கிடந்தாலும் தொனியிலோ... முகத்திலோ காட்டிக் கொள்ளாமல் சாதாரணமாகச் சொல்லிவிட்டு..

''சரி சரி... பலகாரம் இல்லையா?'' என்றவள்

''முதலிரவு என்ன மாதிரி... மாப்பிளை சமாளிச்சிட்டாரா உன்னை'' என்று சீண்டினாள் செல்வி.

வெட்கத்தோடு சிரித்தாள்...

''ஏன்...? ஒரு மாதிரியாக உன்முகம் வாடி இருக்கிறது... என்ன பிரச்சனை மனுசன் எப்படி ஏதாவது..?''

பதில் ஏதுமில்லாமல் யன்னல்பக்கம் பார்த்துக்கொண்டாள் இந்தி...

''நான் உனது சிநேகிதி...சொல், எதுவென்டாலும் சொல்.. என்னால் தீர்க்கமுடியாவிட்டாலும், ஆறுதலாகவாவது இருக்கும் சொல்''

ஒரேயடியாய் அடம்பிடித்தாள் செல்வி..

''ஒன்றுமில்லை.. உனக்குத் தெரியும்.. எனக்கு எதையும் மறைக்க விருப்பமில்லை. அதுவும் புருஷனுக்கு மறைக்கலாமா?''

''என்ன சொல்கிறாய்!''

''கலியாணம் முடிச்ச அண்டு... அண்டைக்கு இரவு, அவர் தான் முன்பு விட்ட தவறுகளை எல்லாம் என்னிடம் கூறி மன்னிப்புக்கூடக் கேட்டார். கணவன் மனைவி என்றால் எப்படி இருக்கவேண்டும் என்று நல்லா புரிந்துவைத்திருக்கிறார். ஆனால் நான் அவருக்கு துரோகம் செய்கிறன்''

''துரோகமா?''

அவள் மனம் பதைபதைத்தது.

''நான் எனது வாழ்வில் நடந்த என் பழைய காதல் சம்பவங்களை சொல்லி விடத்தான் வேண்டும் ஒரு கணவனிடம் மனைவி தனது பழைய காதல் கதைகளை... நடந்துமுடிந்த.. மறக்கப்பட்ட.. அந்த நினைவுகளை எப்படிச் சொல்லமுடியும்.''

''உனக்குத் தெரியும் அவன் சேகரை நான் விரும்பியது... அவன் விரும்புவது போல் நடித்தது... பின்பு காசுக்காக வேறொரு பெண்ணை முடிச்சது எல்லாம் தெரியும் தானே... அதை நான் அவரிடம் இன்னும் சொல்லவில்லை அவர் தன்னுடைய தவறுகளை எல்லாம் சொன்னபோதும், அவர் என்னிடம் உண்மை

> கெட்ட உள்நோக்கத்தோடு கூறப்படும் ஒரு உண்மை, ஆயிரம் பொய்களைவிட மோசமானதாகும்.
>
> சார்ஸ்டூபி பிறேக்

யான கணவனாக நடந்தபோதும். நான் நடக்க வில்லை. என்னால் அதை எப்படி தொடங்குவது எப்படி முடிப்பது என்றே தெரியவில்லை. பழைய காதல் பற்றி .. சீ, சீ... எப்படி? ஆனால் சொல்லாமல் இருப்பது துரோகமல்லவா இன்று எப்படியும் சொல்லியே தீர வேண்டும் அதுதான் குழம்பிப்போயிருக்கிறன்''

இந்தி சொல்லி முடித்தாள்...

வேதனையும், பதட்டமும் கலந்து உடலே தளர்ந்துபோயிருந்தாள்... அவளது மிடுக்கான பேச்சும் பார்வையும் இப்போது இல்லாமல் போயிருந்தது.

''நல்லது, போய்ச் சொல்லு.. சொல்லிப் போட்டு என்னைப்போல ஒரு வாழாவெட்டியாக என்னோடு வந்து இருக்கலாம்... நல்லது சொல்லு எனக்கும் துணையாகப் போகும்.''

அவளது பேச்சின் அர்த்தம் இந்திக்கு விளங்கவில்லை... என்ன சொல்கிறாய் என்பது போல் ஆச்சரியத்தோடு பார்த்தாள்..

செல்வி தொடர்ந்தாள்...

''இதுபோலத்தான் நானும் என் கணவனுக்கு உண்மையாக நடக்கிறன் எண்டு பழையதையெல்லாம் கிழறிப்போட்டன்... மெல்ல மெல்லத் தொடங்கியது சந்தேகம் பின் தொட்டதற்கெல்லாம் சந்தேகப் பட்டான். அடி.. உதைகளைக்கூடப் பொறுக்கலாம். சந்தேக வாழ்வை சகிக்க முடியாது. அவனும் தப்புகளை என் முன்னாலேயே செய்தான்... நீ என்னடி பெரிய உத்தமியோ... ஆட்டக்காரிதானே என்று அடிக்கடி கூறி என்னை எந்தளவுக்கு வெறுக்கச் செய்ய முடியுமோ அந்தளவுக்கு கீழ்த்தரமான வார்த்தைகள் எல்லாம் பாவித்தான். தாங்க முடியாமல் பிரிந்து வந்துவிட்டன்... அது ஒரு நரகம்.. நான்தான் நரகமாக்கினன்.''

''என் வாழ்வு முடிந்து விட்டது.. அதன் தவறு இனி திருத்தமுடியாது. அவ்வளவுதான், ஆனால் நீ இப்போதுதான் நாலுநாள்.. தொடங்கியிருக்கிறாய்... தொடக்கத்திலேயே முடித்து விடுவதானால் இன்றே உன் புருசனிடம் சொல் ''

வேதனையும் கோபமும் செல்வியின் பேச்சில் தெரிந்தது.

''அவர் என்னிடம் உண்மையெல்லாம் சொல்லும்போது நான் மட்டும் பொய்யாக நடக்கலாமா ? அதுவே வேசித்தனம் தானே.''

''விசரி... எது உண்மை, நீ வெறும் குப்பைகளைத்தான் உண்மை, உண்மை என்று அலட்டுகிறாய்... நாம் தெரியாமல் செய்த தவறுகள் வெறும் குப்பைகள்... வீட்டில் சேரும் குப்பைகளை கூட்டி அள்ளி குப்பைத் தொட்டிக்குள் கொட்டுவதில்லையா? எப்பொழுதோ கொட்டிய குப்பைகளை இப்போது கொண்டுவந்து உன் புருசனுக்கு கிளறிக் காட்டினால் அவனால் சகித்துக்கொள்ள முடியுமா? அவசியமில்லை''

''நீ சொல்வது சரி. ஆனால் மனதையல்லவா அரித்துக் கொண்டிருக்கிறது''

''ஏன் குப்பைகளை மனதில் வைத்திருக்கிறாய்? எரித்துவிடு''

மனதில் சுள்ளென்று ஒரு தீப்பொறி பட்டதுபோலிருந்தது இந்திக்கு. ஒரு நொடிக் கணத்தில் சுயநினைவெல்லாம் இழந்தவளாய் கதிரையில் சாய்ந்தபடி தன் தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டாள் ..

''என்னடி இந்தி என்ன ?'' தவித்துப் போனாள் செல்வி.

''ஒன்றும் இல்லை .. ஒன்றும் இல்லை''

இந்திக்கு மனதில் ஒரு வெளிச்சம் ஏற்றியது போலிருந்தது எல்லாக் குப்பைகளும் எரிந்து... போக மனமெல்லாம் வெறுமையானாள் இந்தி. ஏதோ பாரம் குறைந்தது போன்ற உணர்வில் திளைத்தாள் புதியதொரு வேகம் மனமெல்லாம்பரவ, உற்சாகத்தோடு நிமிர்ந்து நின்றாள்.

அவள் கைவிரல்கள் மீண்டும் யன்னலைக் கௌவிப் பிடிக்க. கண்கள் சித்திரனைத் தேடின ..

முற்றிலும் புத்தம் புதியவளாய் இந்தி அன்றைய இரவு சித்திரனுக்கு பரிசாகப் போகிறாள்.

## குந்தியிருப்பது முக்கியமானது!

போர்க்குதிரையை என்னிடம் தாருங்கள்
சமாதானத்தை நோக்கிச் செலுத்துகிறேன்
என்றவரைக் குதிரை முதுகில் அமர்த்தினோம்.
குதிரை போரைநோக்கியே பயணமாகிறது.
குதிரை முதுகில் அமர்ந்தபின்
குதிரை எங்கேபோகிறது என்பதைவிடக்
குதிரைமுதுகில் குந்தியிருப்பது முக்கியமானது!

சி. சிவசேகரம் நன்றி: போரின் முகங்கள்

சு. வே.



# தரிசனை

இரண்டு ஈக்கள்;

ஒன்று ஆண், மற்றையது பெண்.

இரண்டும் மலக்குழியிலே சம்பூரண மாக மேய்ந்து, செல்லக் கதைகள் பேசிக் கூடிக்குலவிக் களித்தபின், 'விர்' என்று பறந்து சென்று, அந்தக் கோவில் மதிலிலே இருந்தன.

முன்கால்கள் இரண்டையுங் கைக ளாக்கி, அவற்றைக் கொண்டு வாய்பூசின. அந்தக் கைகள் இரண்டையும் ஒன்றுட னொன்று தட்டியுந் துடைத்தும் சுத்தி செய்தன. இறகுகளைச் சிலிர்த்து பட படெனத் தட்டி உதறிச் சுத்தி செய்தன.

அப்பொழுது உச்சிக்காலப் பூசையின் முன்னறிவிப்பாய்க் கண்டாமணி ஒலித்தது. அந்த நாத வெள்ளத்திலே ஈக்கள் இரண்டும் மூழ்கி, இன்னதென்று இனங்காண முடி யாததோர் புனிதவுணர்விலே லயித்துத் திளைத்திருந்தன. மணியோசை தேய்ந்து மறைந்த போதினிலே ஆண் ஈ தன் மனை யாளைப் பார்த்து, ''சுவாமி தரிசனஞ் செய்ய வேண்டுமென்று ஒவ்வொரு நாளும் துடிப்பாயே, இன்றைக்கு வேளை வாய்த் திருக்கிறது உச்சிக்காலப்பூசை. போவோமா?'' என்றது.

''சீ; அநாசாரத்தோடா? காலை தொடக்கம் இப்பொழுது வரை நாங்கள் புரண்டுருண்டு எழுந்த இடங்களும் செய்த செயல்களும் ஓ... இன்றைக்கு வேண்டாம் இன்னொருநாள் போவோம்..'' பெண் ஈ மிகக் கூசியது.

ஆண் ஈ சிரித்தது: ''அப்படி யானால் ஒருநாளுமே போக முடியாது. ஆசாரம், அநாசாரம் எல்லாம் ஒவ்வொருவரும் தமக் குத்தாமே விதித்த தகுதியை யும், நேர்ச்சித்த மனப்பாங்கை யும் பொறுத்தவை. எங்களைப் பொறுத்தவரையில் நீ கருதிக் கொண்ட அநாசாரந்தான் உயிர் வாழ்க்கை. அதனால் அந்த அநாசாரமே எங்களுக்கு ஆசாரம். கொஞ்சமும் கூச்சப் படாமல் வா, போவோம்.''

ஆண் ஈயைப் பின்தொடர்ந்து பெண் ஈயும் பறந்து சென்று கோபுர வாயிலை அடைந்தது. ஒருவாறு தேய்ந்திருந்த மனக் கூச்சம், திறந்திருந்த கோவில் வாசலைக் கண்டதும், முழு மூர்க்கமாய் வளர்ந்து பெண் ஈயைத் தடுத்தது.

''ஐயோ, நான் உள்ளே வரவில்லை நீங்கள் என்ன சொல்லியும் மனக்கூச்சம் மாற வில்லை. வேண்டாம். நீங்கள் போய் வாருங்கள். நான் இங்கி ருந்தே சுவாமி தரிசனம் செய் கிறேன்.''

அந்த நேரத்திலே அந்தக் கோவிலிலே இரு மனித சீவன் கள் மாத்திரம் காணப்பட்டன.

ஒன்று கோபுர வாயிலில் நின்றது. அது அந்த உச்சிவேளை யிலே சிவனை வழிபட வந்த சீவன். மற்றொன்று கோபுர வாயிலுக்கு வெகுதூரத்திலே கருவறையில் நின்றது. அது சிவனுக்கு அயலிலே நின்று சிவ னுக்குப் பூசை இயற்ற வந்த சீவன்.

பெண் ஈ பறந்து போய், கோபுர வாயிலில் நின்ற சீவனின் தோளில் இருந்தது. ஏனோ அந்தச் சீவன் அந்த ஈயைக் கலைக்கவில்லை. ஆண் ஈ விரை வாகப் பறந்து சென்று, கருவறை யில் நின்ற சீவனின் தோளில் இருந்தது. அந்தச் சீவன் அந்த ஈயைத் தன்னிலே தீண்டவிடா மல் துரத்தியது. தோல்வியுற்ற ஆண் ஈ சுற்றிச் சுழன்றபின், கருவறையின் ஒரு மூலையிலே சென்றமர்ந்தது. அவ்விடம் முழு வதையும் அளந்தது.

கருவறையில் கருங்கல் தளம் எங்கும், எண்ணெய்யும் தண்ணீரும், தூசும் தும்பும் கலந்த கலவையிற் பிறந்த பிசான் பிசுபிசுத்தது. ஆகும்வரை மங்கலப் பொருளாய், ஆனபின் நிர்மாலியமாய் கழித்துவிடப்பட்ட பத்திர புஷ்பங்களும் பிறவும் ஒருபாற் குவிந்து கிடந்தன. அழுகி நொதுநொதுத்துக் கிடந்த அவற்றில் நிலைகொண்டு, அவை அங்கு குவிந்து காலத்தைக் களித்திடமுடியும். கோமுகை வழியாக வந்த சரக்குப் பூச்சிகளும், அட்டைகளும் அந்தக் ருவியலில் ஆனந்தமாக வாசஞ்செய்தன.

ஆண் ஈ முகத்தைச் சுளித்துக்கொண்டு சிவலிங்கத்தைப் பார்த்தது. பீடமெங்கும் அழுக்காலான சேறு. சேற்றில் மலர்ந்த செந்தாமரையாய் சிவலிங்கம் விளங்கியது. கருவறையில் நின்ற அந்தச் சீவனுக்கு வெளியுலகில் எத்தனை எத்தனையோ அவசரக் கருமங்கள் தேங்கிக் கிடந்தன போலும்; அந்தச் சீவனுக்கு கருவறை அந்தரங்க அறையாய்த் தன்னைத் தவிர வேறு எவரும் அண்டமுடியாத அறையாய் இருக்கும் என்ற எண்ணம் போலும்; இவ்வேதுக்களாலே தானோ பீடத்திற் குவிந்து கிடந்த நிர்மாலியங்களை அது அகற்றவில்லை, கூடு பற்றிய விளக்குக்கு எண்ணெய் விடவில்லை.

அந்தக் கருவறைச் சீவன் மணி கிலுக்கியது, தீபம் காட்டியது, மலர்களால் எறிந்தது. வெகுவிரைவாக வேதமந்திரங்களைக் கொட்டியது. பூசை இயற்றியது. அந்தப் பூசையில் வேகம் இருந்தது. எந்திரகதி இருந்தது, வெறுப்பின் மெல்லிய வாடையும் இருந்தது. ஆனால் இருக்க வேண்டிய பயபக்தி, சாந்தம், கனிவு, சோபை எல்லாம் குடிபோய்விட்டன.

அண்மையில் இருந்து சுவாமி தரிசனம் செய்ய விரும்பிய ஆண் ஈ, ஏமாற்றத்தோடு வெளியே புறப்பட்டு கோபுர வாயிலுக்குப் பறந்து சென்றது. கோபுர வாயிலில் நின்ற சீவனின் தோளிலே பெண் ஈ இருப்பதைக் கண்டது. தான் முன்கண்ட இடத்தில் முன்கண்ட நிலையில் அந்தச் சீவன் நிற்பதைக் கண்டு வியந்தது. தன் மனைவிக்கு அருகிலே சென்று இருந்தது. மனைவி கணவனைக் கருத்தோடு நோக்கியது.

'என்ன, இந்தச் சீவனுக்கு உணர்ச்சியே இல்லையா?' என்று வியப்போடு கேட்டது ஆண் ஈ.

''அப்படித்தான் தெரிகிறது. நானும் இவ்வளவு நேரமாய் இந்தத் தோளிலேதான் இருக்கிறேன் எதற்கும் இந்தச் சீவனை அவதானித்துப் பாருங்கள். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை'' என்றது பெண் ஈ.

ஆண் ஈ சீவனை நோக்கி அளந்தது. அந்தச் சீவனில் ஆட்டமோ அசைவோ இல்லை. மெய்மறந்த நிலை. மனதித்லே சிந்தித்த லயிப்பை, லயிப்பிலே விளைந்த யோகத்தை, யோகத்தின் பேறான ஆனந்தப் பரவசத்தை மெய்ப்பாடுகள் வெளிப்படுத்துகின்றன; கண்ணீர் அருவியாய் மார்பிற் பாய்கிறது. நித்தியசுக சாந்த சோபை முகத்திற் படர்கிறது. மெய்மயிர் பொடித்து நிற்கிறது.

சீவனின் பக்குவப் பாங்கை உள்வாங்கிய ஆண் ஈக்கு வியப்பால், விந்தையால், உள் விளைந்த ஒளியால், தன்னிழப்பு சித்தித்தது.

''என்ன, உங்களைத்தானே'' என்ற குரல் கொடுத்தது பெண் ஈ. குரல் கேட்டுத் தன்னினைவு பெற்ற ஆண்ஈ 'என்ன?' என்றது.

''ஆமாம், கோயிலுக்கு உள்ளே சென்றீர்களே, சென்று''

''நேரே கருவறையையடைந்தேன்.''

''ஐயையோ கருவறைக்கு நீங்கள் போகலாமா?'' ஏதோ ஒருவகைப் பயத்தால் பெண் ஈ துடித்தது.

''பயப்படாதே, போகலாம், போகக்கூடாது என்பவற்றின் பேதமும் பேதத்துக்கான காரணமும் எமக்கு விளங்காது. ஒரு வேளை, அந்தச் சீவன் கருவறைக்குப் போகலாம்.''

''இந்தச்சீவன் இங்கேதான் நிற்க வேண்டும். கருவறைக்குப் போகக்கூடாது என்ற பேதமும் காரணமும் சில மாமேதைகளுக்கு விளங்கியிருக்கலாம். ஆனால், விளங்க வேண்டிய அவசியமுமில்லை. அதனால் போனேன் .....ம் அந்தக் கருவறையிலும் பார்க்க, நாங்கள் மிக்ககளிப்போடு வாழும் சில இடங்கள் இருக்கின்றனவே, அவை எவ்வளவோ மேலானவை''.

''அபசார்ரம்: அபசாரம்; அங்ஙனம் சொல்லக்கூடது. எங்ஙனமானாலும் அந்தக்கருவறை, சிவன் எழுந்தருளியிருக்கும் மூலத்தானமல்லவா'.

''மூலத்தானத்திலே சிவன் இல்லையே''

''ஏன் இல்லை''?

''சிவன் துரத்தப்பட்டுவிட்டார்''

'சிவனா துரத்தப்பட்டார்?, யார் துரத்தினார்?'

''கருவறையில் நின்ற ஒரு சீவன்''

''அப்படியானால் சிவன் எங்கே?''

''வேறெங்குமில்லை இங்கே''

''இங்கே என்றால் எங்கே?''

ஆண் ஈ மெல்லச் சிரித்தது.

''இன்னுமா உனக்கு விளங்கவில்லை? இங்கே என்றால் இங்கேதான். எந்தச் சீவனில் நாங்கள் இருக்கிறோமோ. அந்தச் சீவனின் நெஞ்சிலேதான்.''

''என்ன சொல்லுகிறீர்கள்?''

''ஆமாம் இந்தச் சீவனின் கோலத்தையும் நிலையையும் கண்டு சற்றுமுன்பு வியந்தாயல்லவா? இந்தச் கோலமும் நிலையும் இந்தச்சீவனில் சிவன் குடிகொண்டமையால் விளைந்தவை. இந்தச்சீவன் சிவனோடு ஐக்கியப்பட்டமையால் விளைந்தவை.

இப்பொழுது இந்தச் சீவன் சிவனாகிவிட்டது.

''சிவசிவ, சிவசிவ'' என்று கை கூப்பித் தொழுதது பெண் ஈ

'என்னதவஞ் செய்தோமோ; மிக அண்மையில் நிதரிசனமாகச் சிவனைக் கண்டு தொழக் கிடைத்தபேறே பெரும் பேறு; இப்போது யார்க்குக் கிடைக்கும்.

சிவசிவ, சிவசிவ என்றது ஆண் ஈ'.

சுவாமிதரிசனம் செய்த மன நிறைவோடு ஆண் ஈயும் பெண் ஈயும் வெளியே பறந்து சென்றன. □

☼ ☼ ☼ ☼

# வைத்தியராக முன் நீந்தப் பழகு

சீனா தேசத்து நாடோடிக் கதை

(ஆங்கிலத்திலிருந்து தமிழில் எழுதியது)

நீண்டு அகன்ற ஜாங்சி நதி எப்போதும் சல சல என்று பாய்ந்து கொண்டு இருக்கின்றது. அதன் ஒரு கரையில் ஒரு பிரபல வைத்தியர் வாழ்ந்து வந்தார்.

நதியின் அடுத்த கரையில் ஒரு பணக்காரத் தனவான் வசித்து வந்தான். அவன் நடுத்தர வயதினன். அவன் நோய்வாய்ப்பட்டு சில மாதங்களாகப் படுக்கையில் கிடந்தான். பல வைத்தியர்களை அழைத்து வைத்தியம் பார்த்தார்கள். நோய், குணமடையவில்லை.

ஆற்றின் அடுத்த கரையில் இருக்கும் இந்த வைத்தியரைப்பற்றிக் கேள்விப்பட்டு, உடனே அவரை அழைப்பித்தார்கள்.

நோய்வாய்ப்பட்டிருக்கும் கனவானைக் காப்பாற்றினால் நிறைய பணம் தருவதாகச் சொன்னார்கள். அவனுக்கு நோய் நன்கு முற்றி இருந்தது. இருந்தாலும் பணம் கிடைக்கும் என்ற பேராசையால் வைத்தியம் பார்க்க ஒத்துக் கொண்டார்.

சில நாட்களின் பின்னர் அந்த நோயாளிக் கனவான் இறந்து போனான். ஆத்திரமடைந்த அவனது குடும்பத்தார் வைத்தியரைப் பிடித்து நன்றாக உதைத்தார்கள். ஒரு தூணோடு கட்டி வைத்தார்கள். அன்று நள்ளிரவுக்குப் பின் வைத்தியரைக் கொலைசெய்து புதைத்து விடப் போவதாக மிரட்டிவிட்டுப் போய்விட்டார்கள்.

வைத்தியர் கட்டை அவிழ்த்துக் கொண்டு தப்பிவிட வேண்டுமென முயற்சித்தார். அவருடைய நல்ல காலம் கட்டு அவிழ்ந்துவிட்டது. ஒரே ஓட்டமாக ஆற்றங்கரைக்கு வந்தார். ஆற்றில் குதித்து நீந்தி மறு கரையிலுள்ள வீட்டிற்குப் போய்ச்சேர்ந்தார்

அந்த அகாலத்தில் அவருடைய மகன் தனது தந்தையின் வைத்தியப் புத்தகங்களைப் படித்துக்கொண்டு இருந்தான். அவன் தந்தையைப் போலவே தானும் ஒரு சிறந்த வைத்தியனாக வர விரும்பினான். மகன் அந்த வேளையில் படித்துக் கொண்டு இருந்ததை ஆற்றில் நீந்தி உயிர் தப்பி ஓடிவந்த வைத்தியரான தந்தை கண்டார்.

- சு. சிவராசா

''மகனே நீ வைத்தியராக வர விரும்பினால் வைத்தியப் புத்தகத்தைப் படிப்பதற்கு முன் நன்றாக நீந்துவதற்குப் பழகிக்கொள். அப்போது தான் நீ வைத்தியராக உயிர் வாழலாம்''.

தந்தை இப்படிச் சொன்னதைக் கேட்டு மகன் முழித்தான். பாவம், அந்த மகனுக்கு இவரின் அவலம் எங்கே தெரியப்போகின்றது?

# தாய்



( உருவகக் கதை )

மனிதனைப் போலவே றொரு சுயநலக்காரனை இந்த உலகத்தில் நான் கண்டதேயில்லை. எல்லாம் தன்னுடைய நன்மைக்காகவே செய்கிறான். தன்னுடைய நன்மைக்காக என்னை இந்த 'மளிகைக் கடைக்குக் கொண்டுவந்த முதலாளீ என்னை இப்படி அபலையாக்குவாரென்று கண்டேனா? காலையில் அரைப் போத்தல் பால், மத்தியான்மும் இரவுக்கும் நாவுக்கு ருசியான உணவு எல்லாம் தந்து என்னை வளர்த்தது தன்னுடைய நன்மைக்காகத்தான் என்பதை இப்பதானே உணர்கிறேன்.

இப்ப அரைப்போத்தல் பாலை என்முன்னால் ஒரு கோப்பையில் ஊற்றிவிட்டுப் போகிறார். இதைக் குடிக்கவா? விடவா? என்று என்மனம் போராடுகிறது. இப்ப, என் பிள்ளை- ஒரேயொரு பொம்பிளைப்பிள்ளை, எங்கை அலைகிறாளோ? யாரிடம் இடி வாங்குகிறாளோ? பட்டினி கிடக்கிறாளோ? சூதுவாதறியாப் பச்சிளம் பாலகி.

நேற்றுவரை என் செல்வத்தை எப்படிப் பேணிக் காத்து வந்தேன்? பேய் வேகத்தில் வரும் வாகனங்கள் என் பிள்ளையை மோதிச் சாகடித்துவிடும் என்று எண்ணி றோட்டில் இறங்கவிடாமல் பாதுகாத்து வந்தேனே! இப்ப என் செல்வி எந்த வாகனத்தின் சில்லால் நசிபட்டு இறந்துபோய்க் கிடக்கிறாளோ?

கடவுளே! நீ இப்படியெல்லாம் இந்த மனிதரைச் சுயநலக்காரராக, இரக்கமில்லாதவர்களாகப் படைத்திருக்கக் கூடாது. என் வயிற்றில் பிறந்த என் செல்வப் புதல்வி நேற்றுக் கூட, காலை சாப்பிட்ட பின் இந்த ஓரத்தில் கிடந்து நான் எனது வாலை அங்கும் இங்கும் ஆட்டிக்கொண்டிருக்க, பாய்ந்து பாய்ந்து எலியைப் பிடிப்பது போல, வால் நுனியை கவ்விக் கவ்வி விளையாடிக்கொண்டிருந்தாளே! நினைக்க நினைக்க வயிறு பற்றி எரியுதே!

கடைக்கு வருவோரெல்லாம் என்னையும் மகளையும் கண்டதும்,

'என்ன முதலாளி, உங்கள் மணி .. அதுதான் முதலாளி எனக்குச் சூட்டிய பெயர், உரிச்சு வைச்சாப் போல தன்னைப் போல ஒருபிள்ளையைப் பெத்து வைச்சிருக்கே!' என்று சொல்வார்களே.

ச்சே, இந்த மனிதரின் 'நா' பொல்லாதது. அதுதான் இன்றைக்கு என் பிள்ளையை இழந்து தவிக்கிறன்.

எங்கடை முதலாளியின் மகள் கடந்த நல்லூர்த் தேர்ச் சனக்கூட்டத்தில் கைதவறி விட்டாள் என்று தாயும் தகப்பனும் எப்படித் துடிச்சினம். என்ரை பிள்ளையும் அப்பிடித்தானே எனக்கு அருமை. இதை ஏன் இந்த மனிதர் உணருகிறார்களில்லை?

நான் கண்ணயர்ந்து இருந்த நேரம் பார்த்து, என் பிள்ளையை ஒரு பூறியா பையில் போட்டு, 'எங்கையாவது கொண்டுபோய் விட்டுவிட்டு வா' என்று முதலாளி தன் வேலை ஆளுக்குச் சொல்லி அனுப்பியதாகக் கேள்விப்பட்டேன்.

என்னை, தன்னுடைய கடையில் வைத்திருக்கும் காரணத்தை முதலாளி அன்றொரு நாள் யாருக்கோ கூறியதை நான் கேட்டுக்கொண்டிருந்தேன்.

கடையில் எலிகள் தொல்லை தாங்கமுடியாமலிருந்ததாம். வாழைப்பழம், இனிப்புப் பண்டங்களை எலிகள் நாசமாக்கிக் கொண்டிருந்ததாம். என்னைக் கடையில் வைத்து வளர்க்கத் தொடங்கிய நாள் தொட்டு எலிகள் தலை காட்டுவதே இல்லையாம்.

ஏதோ விதிவசத்தால் நான் கருவுற்று இந்தப் பிள்ளையைப் பெற்றெடுத்தேன். இப்ப எங்கள் இருவருக்கும் சாப்பாடு போடக் கட்டாதாம். அத்துடன் அறிவு குறைந்த என் குழந்தை கடையை அசிங்கப்படுத்துகிறாளாம். அதுதான் இந்த 'அநியாயத்துக்கான காரணமாம். எப்படி இருக்கிறது நியாயம்?

இப்படித் தாய்ப் பூனை அழுதுகொண்டிருக்கும்போது திடீரென எங்கிருந்தோ குட்டிப்

---

ஆசிரியர்: மாணவர்களே! ஏதேனும் சந்தேகம் இருந்தால் கேள்விகள் கேட்கலாம்.

மாணவன்: கேள்விப் பேப்பர் எந்த அச்சுக்கூடத்தில் அடிக்கிறது சேர்?

நாகமணி மகேந்திரலிங்கம்

---

பூனை பாய்ந்து வந்து தாயின் மார்பைக் கட்டிப்பிடித்து 'மியாவ், மியாவ்' என்று அழத் தொடங்கியது.

தாய்ப்பூனை பரவசத்தால் தன்முன் கோப்பையிலிருந்த பாலையும் திரும்பிப்பாராமல் குட்டியை அணைத்துக் கூட்டிக் கொண்டு கடையை விட்டு வீதியில் இறங்கி நடக்கிறது!

'இந்த நன்றிகெட்ட மனிதரிடம் உண்டு வாழ்வதை விட, நாங்கள் தெருத் தெருவாய் அலைந்து பிச்சை எடுத்துச் சாப்பிடுவோம்'

என்று அந்தப் பூனை எண்ணியதோ என்னவோ!

— ப. தெய்வேந்திரன்

●

பத்திரிகையாளர்: அம்மா, உங்கள் மணவாழ்வின மணிவிழா கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் உங்கள் கணவரின் மிக நல்ல குணம் என்ன என்று கூறமுடியுமா?

பெண்: ஒருபோதும் திருப்பியடிக்கமாட்டார்!

ப. தெய்வேந்திரன்

# வயோதிகன்



வந்தார்கள்!
ஏதாவது வாங்கிச் செல்ல
குத்தகைக் காரனைத்தவிர
இன்று சந்தையில் எதுவும் இல்லை
அவன் காய்ந்து போயிருந்தான்.

அவனது பாதணிகளும்கூட
பறிபோயிருந்தன ..
அவன்
அச்சந்தையில் பலமுறை
தன் இரத்தங்களையும்
சதைகளையும்
உணர்வுகளையும் விற்றவன்;
பாசங்களை வாங்கிக்கொண்டு ..
இன்று அவன் வாங்கிக்கொள்ள
வந்தவர்கள் அதை கொண்டுவரவில்லை!

காய்ந்த கண்களும்
நொய்ந்த கால்களும் மட்டுந்தான்
அவனிடம் இருந்தன.

நன்றாக இருண்டுவிட்டது
இன்னும்
வியாபாரிகள் சிலர்
நிற்கின்றார்கள்!

ஒருவேளை – கந்தைத்துணியின்
மறைவிடத்தில் ஏதாவது
ஒழிந்திருக்கலாம் என்ற
நம்பிக்கையில்!

- மொழிபெயர்ப்புக் கவிதை -

□□

மகன்: சிங்கம், புலி, கரடி, பேய் பிசாசு .. எதுக்குமே நீ பயப்படமாட்டியா அப்பா.

தகப்பன்: க கா ஒன்றுக்குமே பயப்படமாட்டேன்.

மகன்: அம்மா ஒன்றுக்கு மட்டும் தான் பயப்படுவாயாக்கும்.

தகப்பன்: ? ? ?

— சு. சிவராசா

பெரியவர்: ஏன் காலாட்டிக் கொண்டிருக்கிறாய்?

பையன்: சும்மா இருப்பது சோம்பேறித்தனமல்லவா அது தான் காலாட்டிக் கொண்டிருக்கிறேன்.

ப. தெய்வேந்திரன்

ஒருவர்: உங்கள் திருமணத்தைப்பார்க்க தெய்வீகத் திருமணம் போல இருக்கு.

மற்றவர்: ஓம் நாங்கள் கோயிலில் காதலித்து திருமணம் செய்தது.

நன்றி: சிரித்திரன்

ஒருவர்: உனக்கு வீடே இல்லை, விதானையார் எப்படி உனக்கு ஏழு பைக்கட் சீமெந்து தந்தார்?

மற்றவர்: அது, நான் கற்பனைக் கோட்டை கட்டப்போறன் எண்டு சொன்னன் அவர் நம்பிவிட்டார்!

ப. தெய்வேந்திரன்
யாழ்ப்பாணம்.

# கச்சேரி

சீர்நிறைந்த ஊர்தன்னில்,
சீரழியும் நானொருவன்,
கூறும் கதையைக் கூர்ந்து கேளுங்கள்;
முப்பத் தைந்தாண்டு முழுமையாய்
சேவை செய்து, மூப்பெய்தி ஓய்வுபெற்று,
நிம்மதியைத் தொலைத்து விட்டு,
தேடிக்களைத்து,
தெருத் தெருவாய் அலைந்து,
காலங் கழிக்கையிலே,
ஊர்விட்டு நானேக ஓரலுவல் நேர்ந்திடவே

கொழும்பேகி ஆறுமாதம்
குடியிருந்த காரணத்தால்,
ஆறுமாதப் பென்ஷன்
அடிப்படையில் போய்விடவே,
வவுச்சர்களைக் கொண்டு சென்று,
வங்கியிடம் வினாத்தொடுத்தேன்.
மூன்று மாதப் பென்ஷனதை வங்கிக்
கணக்கிலிட்டு, எஞ்சிய மூன்றையும்
எடுங்கள் கச்சேரியில் என்று
கைவிரித்தார், வங்கி அலுவலர்கள்.
கச்சேரிப் படியேறிக் கண்டு கொண்டேன்
எழுதுநரை மூன்று மாதப் பென்ஷன்
கைக்கு வராக் காரணத்தை விளக்கமாய்
எழுதிய விண்ணப்பம் கையளித்து,
''தம்பி இதை எனக்குச் செக்காகத்
தந்து விட்டால் பேருதவி, பேருதவி.
என் உள்ளம் கனிந்த நன்றி உமைச் சாரும்''
எனக்கூறி, அவர் முகத்தை ஏழ்மையுடன்
நோக்கி நிற்க, அவர்,
''ஐயா, தரலாம் பிரச்சனை யில்லை,
ஆனால், கணக்காளர்
சென்று விட்டார் கொழும்பு;
வேறும் பல சிக்கலுண்டு,
அடுத்த மாதப் பென்ஷனுடன்
அதையுஞ் சேர்த்துப் போட்டிடுவன்.
பொங்கலைத் தடல்புடலாய்
கொண்டாட வாய்ப்பாகும்''
என்றுரைத்த எழுதுநரை
நான் நோக்கி உரைத்தேன்,
''பொங்கலுக்கு இன்னும்
இருக்கிறது ஒருமாதம் அதுவரைக்கும்
சீவியம் எவ்வாறு போக்குவது?
என்ற என் வினாவுக்கு அவர்,
''கொழும்பாலை வந்தநீங்க,
கொணர்ந்திருப்பீர் காசு பணம்''
எனக் கூறி நகைத்தவரை நான் பார்த்து,
''வெளிநாட்டில் யாரேனும்
எனக் கில்லைத் தம்பி,
வவுச்சர் ஒன்று போட்டு
செக் தந்தால் பேருதவி,
அந்த உதவிதனை
என்றைக்கும் நான் மறவேன்'' - அவர்,
''பொறுத்த நிங்க, பொறுங்கையா.

பொங்கலுடன் நாலு மாதம்
பொலிவாகத் தந்திடுவன்.''
மேலும் நெருக்கினால்
பொங்கலுக்கும் கிடையாது
என்ற எண்ணத்தால்
ஏகி விட்டேன் என்இல்லம்.
பொங்கலுக்கு ஐந்து நாள்
முந்திய நாளொன்றில்
தைமாத வவுச்சர் தனைத்
தந்து விட்டார் தபால் காரர்.
நாலு மாதப் பென்ஷனல்லோ!
நாவூற நான் திறந்தேன்,
வவுச்சர் எனைப் பார்த்து
ஏளனமாய்ச் சிரிக்கிறது!
ஆ! ஒருமாதப் பென்ஷன் மட்டும்
தாங்கி வந்த வவுச்சருடன்

# காவியம்....!

**- ஓய்வூதியன்**

பொங்கும் இதயமுடன்
போய்ச் சேர்ந்தேன் கச்சேரி.
முகமறிந்த எழுதுநர் முன்
சிலையாக நான் நின்றேன்.
என்பெயர் கூறி அவர்: 'ச்சொ, ச்சொ'
ஒலியெழுப்பி, ''ஐயா, தவறொன்று
நேர்ந்துவிட்ட சங்கதியை
நேர்மையாய்க் கூறுகிறேன்,
வேலைப் பழு கூடியதால், எனக்கு
வேறொருவர் கைகொடுத்தார்.
ஒரு பகுதிசார் வேலை
அவரேற்றுச் செய்கையிலே மேலதிகக்
கொடுப்பனவை கைகழுவ விட்டு விட்டார்;
கவலைப் படவேண்டாம்,
ஸ்பெஷல் வவுச்சர் ஒன்று போட்டுத்
தந்திடலாம் மூன்றுஞ்சேர.
'ஒன்றரை மாதங்கள் முன்
உதைத்தானே நான் சொன்னேன்,
அன்று அதைச் செய்திருந்தால்
இன்று ஏன் நானலைவான்?'
என்று நான் கேட்கவில்லை,
கேட்டு விட்டால் நட்டமெனப்

பேசாது நின்ற என்
பெருமூச்சு வெளியேற, அவர்
''குறையினைக்க வேண்டாமையா,
நாளைக்குப் போயா நாள்,
அடுத்த நாள் மட்டுந்தான்
ஒரேயொரு வேலைநாள்,
அங்காலை பொங்கல்,
அதைக் கழிச்சு வாருங்கோ
கைக்கு வரும் காசோலை''
எனக் கூறி அவர் நகைக்க,
நான் சென்றேன் என் வீடு.
பொங்கல் முடிந்தபின்,
இரு நாள் பொறுத்திருந்து,
போனேன் மறுபடியும்.

கண்டதும் என்னை என்கிளாக்கர்
தன் பின்னால் இருக்குமொரு
கிளாக்கருடன் ஏதேதோ
குசு குசுத்த கையோடு
+ ''இம்பிறெஸ்ற் (Imprest) வராமல்
நாமென்ன செய்யலாம்?''
என்று அவர் கூறியது,
எனக்கும் தான் கேட்கிறது;
முன்னவர் பின் தொடர்ந்தார்,
''இரண்டு நாள் கழிந்து விட்டால்
வந்து விடும் 'இம்பிறெஸ்ற்'
வாருங்கள் அப்போது
காசோலை கைக்கு வரும்''
பேசிப் பலனில்லை பேசினால்,
பல நாள் கழிந்தாலும் பணம் மட்டும்
கைக்கு வரா'', என்ற நினைவோடு
ஏகினேன் வெளியே!
போகும் வழி மருங்கில்,
கணக்காளர் வாசல் கண்ணில் பட்டிடவே,
அவர்களிடம் முறையிட்டால்
பலனேதும் உண்டென்ற நப்பாசை ஊந்திவிட,
சென்று அவர் முன்னாலே,
சேவகன் போல் நின்றிடவே - அவர்,
''என்ன?'' என்று பார்வையால்
என்னை நோக்கியதும், ஆதியோ டந்தமாய்
என் கதையைக் கூறிவிட்டேன் - அவர்
பொறுமையாய்க் கேட்ட பின்பு
'' 'இம்பிறெஸ்ற்' இன்னும்
இரு நாளால் வந்துவிடும்'' எனக் கூறிச்
சிறுதுண்டு ஒன்றெடுத்து, எனைநோக்கி,
''பெயர் என்ன?, பென்ஷன் எண் என்ன
என வினவ' நான் கூற,
குறித்துவைத்துக் கூறுகிறார்;
''இருநாள் கழிய வாருங்கள்'' என்ற
இதமான வார்த்தைகளால்
நம்பிக்கை வரப்பெற்று,
நன்றி கூறி விடைபெற்றேன்,
இரு நாள் கழிந்து, மறுநாள் ஒருவெள்ளி,
காலை பத்து மணியளவில் கச்சேரி
சென்றடைந்து எழுதுநர் முன்னிற்க, அவர்,
''என் பணி முடிந்ததையா,
பின்னாலிருப் பவரிடம் பேசிப் பாருங்கள்,''
என்றதும் பேசினேன் அவரோடும், அவர்
சொன்னார். ''என் பணியும் முடிந்ததையா,
'செக்' எழுத உரியவர்க்கு
சேர்ப்பித்து விட்டேன்'' என்றதும்,
'செக் எழுதுபவரையும் தேடிப்பிடித்து வினவ,
அவர்தன் கோவைத் தட்டுக்களைத்
தேடிக் களைத்துக் கூறுகிறார்,
''இன்னும் வவுச்சர் எனக்கு வரவில்லை''
என்றதும் அவர், நான் சென்று,
முன்னவரிடம் முறையிட்டேன். பின்பு அவர்
திரும்பவும் தன் கோவைத் தட்டுகளைத் தேடி
ஒருவாறு என் வவுச்சரைக் கண்டெடுத்து,
பிறிதொருவர்க்கு அனுப்பிவிட்டுப்
பேசாதிருந்தார். ''இனி என்ன செய்வது?
என எண்ணி அருகில் கிளைப் பொறுப்பாளர்
போல தோன்றிய ஒருவரை அணுகி,
'ஐயா, நீங்கள் கிளைக்குப்
பொறுப்பாளர் போலிருக்கு,
தயைகூர்ந்து சொல்லுங்கள்
இவர்களிடம் என் செக்கை, இன்றைக்கே
தந்துதவும் வண்ணம்'' என்று நான் கூறியதும்,
''அவர்களுடன் தான் பேசித் தீருங்கள்''
எனக் கூறிக் கைவிரித்தார் அவரும்,
''இன்னும் இவர்களுடன் அலைவதால்
வேலையில்லை'' என எண்ணி,
திரும்பவும் கணக்காளர் முன்னின்றேன்.
கணக்காளர் கண்ணியவான்,
எனைக் கண்ணுற்ற கணப்பொழுதில்
சட்டென் றெழுந்து, பென்ஷன் கிளையேகப்
பின்தொடர்ந்து எட்ட நின்றேன்,
ஒருவரிடமிருந்த வவுச்சரை அவர் எடுத்து,
'செக்' எழுதும் பெண் இலிகிதரிடம் தந்து,
ஏதோ கூறிச் சென்றுவிட்டார்;
பெண்மணியை நானணுகி,
''அம்மா, பல நாளாய் அலைகின்றேன்,
இன்றைக்கு வெள்ளி, வேளைக்கு
செக் கிடைத்தால், வங்கி பூட்டமுன்
மாற்றிடலாம் காசாக'' என்றதும்,
''கொஞ்சம் இருங்கையா,
'செக்' எழுதிக் கையொப்பம்
இடுவதற்குப் போட்டிடுவன்'' என்றதும்,
வாசலுக்குக் கிட்டவுள்ள கதிரையொன்றில்
அமர்ந்து கொண்டேன் களைபோக்க,
அவ்வேளை, சிந்தனைகள்
சிறகடித்துப் பறக்கிறது,

---

+ திணைக்களங்களின் செலவினங்களுக்கு
அரசினால் வழங்கப்படும் முற்பணம்

'காலச் சுழற்சியிலே இவர்களும் நாளைக்கு,
எந்நிலையை எய்தாதிருப்பாரா?
அரச சேவையில் உள்ளவர்கள்
அடையும் சலுகைகள் எத்தனை?
'ரீ இன்ரேவல், லஞ் இன்ரேவல் நீங்கலாக,
சிறார் பள்ளி, சில்லறை ஷொப்பிங்,
தினசரி செய்தித்தாள்,
துப்பறியும் நாவல்,
பலரின் அலுவலக நேரத்தை ஆக்கிரமிக்கும்,
அதையிட்டு யாரும்
அக்கறை கொள்ள வில்லை - ஆனால்
அப்பாவிப் பொது மகனை
அலட்சியம் செய்யாதீர்!'
அரைமணி காத்திருந்தும்
ஆகவில்லை ஏதும்;
எழுந்து பெண் இலிகிதரின்
இருக்கை முன்னின்றேன்.
''கையெழுத்துக்காக காசோலை போட்டாச்சு,
பிரதம லிகிதர் வங்கி சென்றுவிட்டார்,
வந்ததும் ஒப்பமிட்டுத் தந்திடலாம்'' என்றார்.
நேரத்தைப் பார்த்தேன்,
நண்பகலைக் கிட்டியது.
''வேறொருவர் கையொப்பம்
போட இயலாதா?''
என வினவ அவர் சொன்னார்,
''இல்லை அவர்தான் வரவேணும்''
'C. C. ஒரு மாதம் 'சிக் லீவில்' நின்றுவிட்டால்,
கச்சேரிக் கொடுப்பனவு
என்னாவது அம்மா?'
என்று நான் கேட்கவில்லை, ஆனால்
எண்ணத்தில் ஒரு கேள்வி,
காசோலை ஒப்பமிடும் மூவரது
மாதிரி ஒப்பங்கள் வங்கிக்கு அனுப்பும்
நடைமுறையும் அறிந்திருந்தேன்,
அந்த நடைமுறையை
அவர்களிடம் கேட்டு விட்டால்
வந்து விடும் வினையென்று,
வாழாய் இருந்து விட்டேன்
கணக்காளர் கண்ணியவான், பென்ஷன் கிளை
சென்று,
திரும்பி வருகின்றார் தனதறை நோக்கி,
அவர் கண்ணில் படும் வண்ணம்,
எழுந்து நிற்கின்றேன் வழியருகில்;
கண்டவர் கருணைகொண்டு,
திரும்பி அக்கிளை சென்றார்.
காசோலை எழுதிய பெண் லிகிதருடன்
ஏதோ உரையாடி, அதன் பின்,
C. C யின் மேசையில் வெகு நேரமாக
பள்ளி கொண்டிருந்த பதிவேடொன்றை,
கையிலெடுத்து ஊழியர் ஒருவரிடம் தந்து,
ஏதோ கூறி அனுப்பிவிட்டார் வெளியே.
ஓரிரு நிமிடங்களே கழிந்திருக்கும்,
திரும்பி வந்து பதிவேட்டைக்
கையளித்தார் ஒருவரிடம்,
எழுதுநர் எனை அழைக்க, நான் சென்று,
பதிவேட்டில் அவர் சுட்டிய இடந்தன்னில்
பாவியென் கையெழுத்தைப் பதியவைத்து,
மூன்று மாதப் பென்ஷன்
முழுமையாய்ப் போட்ட செக்கை
நன்றி கூறிப் பெற்று, கணக்காளர் அறைசென்று
அவர்களுக்கும் நன்றிகூறி வெளியேறும்போது,
காசோலை மீது கண்ட
இரண்டாவது கையொப்பம்
நிர்வாக உத்தியோகத்தரது வென அறிந்து,
இதை முன்பே செய்திருந்தால் இதுவரை
காசோலை பணமாகி வீடு வந்திருக்கும்
என எண்ணி, நேரத்தை நோக்கினேன்,
கைக்கடிகாரம் காட்டிய நேரம்,
பன்னிரண்டு முப்பது; பறந்தேன் சைக்கிளில்,
கச்சேரிதொடங்கி, காசு தரும் வங்கிவரை
ஏறி, இறங்கும் இடங்கள்
ஐந்தோ, ஆறோ!
எல்லாம் கடந்து வங்கிவாசல் வரை
சென்று விட்டேன், மூச்சிளைக்க;
வங்கிப் படிக்கட்டில்கால் பதித்த நேரம்
பாதுகாப்பு ஊழியர் சுருக்குக் கதவை,
'கட, கட வெனச் சாத்தி விட்டார்!
''தம்பி ஒரு செக் மட்டும் மாற்றவேணும்
தயவு செய்து உள்ளே விடும்'' என்றேன்.
''எங்கள் கடமை ஐயா இது
வெறி சொறி, திங்கள் வந்து மாற்றுங்கள்''

எனக் கூறி, சாத்திய கதவுக்குப்
பூட்டும் ஒன்று போட்டு விட்டார்!

எங்கும் வெறுமை,
எல்லாம் வெறுமை!
பொங்கும் இதயச்
சுமையோடு திரும்புகிறேன்
இல்லம் நோக்கி!


ஒருவர்: யார் முதன்முதல் வடையைக் கண்டுபிடிச்சவன் சொல்லுபார்ப்பம்.

மற்றவர்: ... .........

ஒருவர்: உழுந்தை நடுவில்கிள்ளி மிச்சம் பிடிக்கத்தெரிந்த கஞ்சப்பயல்

நன்றி: சிரித்திரன்.

# உலகக் கோப்பை கால்பந்து




1998 இல் பிரான்சில் நடக்க இருக்கும் உலகக் கோப்பை கால் பந்தாட்டப் போட்டிக்கு 32 குழுக்கள் இறுதித் தேர்வு பெற்றுள்ளன. எவ்விதத்திலாவது உலகக் கோப்பை பந்தயத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று பாடுபட்ட பல நாடுகளின் முயற்சி பயனளிக்கவில்லை. முதல் சுற்றிலேயே பல நாடுகள் தோற்றுப்போயின.

உலகக் கோப்பை கால்பந்தாட்ட அணிகளின் எண்ணிக்கை மூன்றாவது முறையாக உயர்த்தப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு உலகக்கோப்பைப் போட்டி ஆர்ஜென்டினாவில் நடந்தபோது 16 அணிகளே கலந்து கொண்டன. இதை அடுத்து 1982 முதல் (ஸ்பெயின்) 1994 வரையான (அமெரிக்கா) காலகட்டத்தில் இப் போட்டிக்கான அணிகளின் எண்ணிக்கை 24 ஆக உயர்த்தப்பட்டது. உலகக் கால்பந்துக் குழுவின் (FIFA) தலைவர் ஜோன் ஹேவலாங்கி. 1998 இல் பிரான்சில் நடைபெறவுள்ள உலகக்கோப்பைப் போட்டியில் 32 அணிகள் கலந்து கொள்ளும் என்று அறிவித்துள்ளார். கால்பந்து அணி உறுப்புநாடுகளின் எண்ணிக்கை தற்போது 200 ஆக உயர்ந்துவிட்டதால், இறுதிப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் அணிகளின் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆப்பிரிக்காவிலிருந்து ஐந்து, ஐரோப்பிய நாடுகளிலிருந்து 15, தென் அமெரிக்கா விலிருந்து ஐந்து, கரீபியன் பகுதியிலிருந்து மூன்று, ஆசியாவிலிருந்து நான்கு என்று மொத்தம் 32 அணிகள் பிரான்சில் இறுதிப் போட்டியில் கலந்துகொள்ள இருக்கின்றன.

உலகக்கோப்பை போட்டிக்கான பிரிவுகள் முடிவு செய்யப்பட்டுவிட்ட நிலையில் மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கும் நாடுகள் பிரேசில், ஆர்ஜென்டினா மற்றும் ஜெர்மனியே. முன்னாள் உலகக்கோப்பை சாம்பியன்களான இவற்றை எதிர்க்கும் வலிமையான பிற நாடுகள் அணியில் இல்லை என்பதே இதன் முக்கிய காரணம்.

உலகக் கோப்பையின் துவக்க தினத்தில் (1998, ஜுன் 10) பிரேசில் X ஸ்காட்லாந்தையும், ஈரான் X அமெரிக்காவையும் எதிர்த்தாடவிருக்கின்றன. உலகளவில் கடுமையான விரோதம் கொண்டுள்ள ஈரானும் – அமெரிக்காவும் விளையாட்டிலும் எதிரெதிர் அணிகளாக நின்று மோதுகின்றன.

பிரான்சில் நடக்க இருக்கும் இறுதிப் போட்டிக்குச் செல்கின்ற ஐந்து ஆப்பிரிக்க அணிகளில், காமரூன் நான்கு முறை வெற்றி பெற்று இந்த வாய்ப்பினைப் பெற்றுள்ளது. 1966 இல் ஒலிம்பிக் வரை சென்ற நைஜீரியா, மொனாகோ, துனிசியா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளும் உலகக்கோப்பைக்குப் போட்டியிடும். தென்னாபிரிக்கா 1990-ஆம் ஆண்டுதான் உலகக் குழு உறுப்பினராக மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஆப்பிரிக்க நாடுகளுக்குள்ளேயே நடந்த தொடக்க நிலைத் தேர்வில் மொத்தம் 22 அணிகள் கலந்து கொண்டன. இவற்றுள் நைஜீரியா துவக்கத்திலிருந்தே நன்றாக விளையாடியது. இருபது ஆண்டு காலத்திற்குப் பிறகு துனிசியா இப்போதுதான் உலகக்கோப்பை இறுதிப் போட்டிக்கு வந்துள்ளது.

ஐரோப்பாவிலிருந்து பிரான்சுக்குச் செல்ல இருக்கும் 15 குழுக்களை மிக சிரமத்துடனேயே தேர்ந்துள்ளனர். முதற் கட்டத்தில் 49 ஐரோப்பிய நாடுகள் கலந்துகொண்டபோது அவற்றை ஒன்பது பிரிவாகப் பிரித்து போட்டியிடச் செய்தனர். இப்பிரிவுகளில் வெற்றி பெற்றோரை மட்டும் தனியாகப் பிரித்து மீண்டும் விளையாடச் செய்தனர். இதில் ஜெர்மனி தேர்வு பெற்றுவிட்டது. நான்கு ஆண்டுகளாக இறுதிப் போட்

டிக்கு வரமுடியாமல் இருந்த இங்கிலாந்து, இத்தாலியை வென்று இப்போது பிரான்சுக்கு வருகிறது. டென்மார்க், நோர்வே, ஆஸ்திரியா, பல்கேரியா, ஸ்பெயின், நெதர்லாந்து, பிரேஸில் ஆகிய நாடுகளும் உலகக் கோப்பைப் போட்டியில் கலந்து கொள்ளுகின்றன. இந்த விளையாட்டை நடத்தும் வரவேற்பு நாடாகிய (Host Country) பிரான்சும், மரபு ரீதியில் முதல் கட்டப் போட்டி எதுவுமின்றி உலகக் கோப்பையில் நேரடியாகவே கலந்து கொள்ளும். லாட்வியாவைத் தோற்கடித்த ஸ்காட்லாந்தும் இறுதிப் போட்டிக்கு வருகிறது. இரண்டாவது கட்டமாக ஐரோப்பாவிலேயே நடந்த முதல் நிலைப் போட்டியில் ருஷ்யா, அயர்லாந்து, ஹங்கேரி, பெல்ஜியம், குரோஷியா, உக்ரைன், யூகோஸ்லாவியா போன்ற நாடுகளிலிருந்து நான்கு அணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

மாட்சுகள் விபரம்:

| | | | |
|---|---|---|---|
| 1930 | 18 | 70 | 3.89 |
| 1934 | 17 | 70 | 4.12 |
| 1938 | 18 | 84 | 4.67 |
| 1950 | 22 | 88 | 4.00 |
| 1954 | 26 | 140 | 5.38 |
| 1958 | 35 | 126 | 3.60 |
| 1962 | 32 | 89 | 2.78 |
| 1966 | 32 | 89 | 2.78 |
| 1970 | 32 | 95 | 2.97 |
| 1974 | 38 | 97 | 2.55 |
| 1978 | 38 | 102 | 2.68 |
| 1982 | 52 | 146+ | 2.81 |
| 1986 | 52 | 132+ | 2.54 |
| 1990 | 52 | 115+ | 2.21 |
| 1994 | 52 | 141 | 2.71 |


\+ பெனால்டி ஷூட்-அவுட் சேர்க்கப்படவில்லை.

தென் அமெரிக்கக் குழுவில் இருந்து உலகக் கோப்பைக்குப் போட்டியிட வரும் நாடுகள் ஐந்து. 1986-இல் மெக்ஸிகோ உலகக் கோப்பையில் விளையாடிய ஆர்ஜென்டினா, பராகுவே, கொலம்பியா ஆகிய நாடுகள் மீண்டும் அந்த வாய்ப்பைப் பெற்றுள்ளன. ஒன்பதுக்கு மேற்பட்ட அணிகளிலிருந்து அவை தேர்ந்தெடுக்கப்பட்டன.

ஆசிய விளையாட்டு அணிகளை பத்தாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் நான்கு அணிகளை வைத்து முதற்கட்டப்போட்டி நடத்தப்பட்டது. தென்கொரியா இறுதிப்போட்டிக்கு வாய்ப்பினைப் பெற்று விட்டது. ஜப்பானுக்கும் உலகக்கோப்பையில் விளையாடும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

கரீபியன் நாடுகளைப் பொறுத்தவரையில் அவற்றை மூன்று கட்டமாகப் பிரித்து தொடக்க நிலைப் போட்டி நடந்தது. மெக்ஸிகோ வெற்றி பெற்று விட்டது.

ஸனில் பி. தாமஸ்,
மலையாள மனோரமா.



ஒருவர்: திடீரென்று பல் எல்லாத்தையும் காணேல. ஏதேன் அக்சிடண்டோ?

மற்றவர்: அது இந்தச் சினிமாப் பாட்டு 'க்டவுட்டச்சிக்ட' எண்டு படிச்சன் எல்லாப் பல்லும் போட்டுது...

தமிழினி - நல்லூர்

## பிட்டத்தில் அடிக்கலாமா?

பள்ளிகளிலும் வீடுகளிலும் அதிகமாக காணப்படும் பிட்டத்தில் அடித்தல் என்பது மோசமான ஒரு பழக்கமாகும். அமெரிக்க பள்ளிகளில் பிட்டத்தில் அடித்தல் 1974ல் இருந்து தடைசெய்யப்பட்டுள்ளது. சுமார் 75 சதவிகிதம் மனோதத்துவ நிபுணர்கள் தாங்கள் இவ்வித பிட்டத்தில் அடிப்பதை எதிர்ப்பதாகக் குறிப்பிடுகின்றனர். என்றாலும் சுமார் 48 சதவிகிதம் பேர் இப்போதும் தங்கள் குழந்தைகளை அடிக்கின்றனர். 1995இல் வெளியான அமெரிக்க மனோதத்துவ அறிக்கை ஒன்று, பிட்டத்தில் அடிக்கப்படும் குழந்தைகளே பலவித மனநோய்களுக்கு ஆளாகின்றனர் என்று தெரிவிக்கின்றது.

வாழ்வில்
பலதடைகள் ஏற்பட்டபோதும்
தடைகளைச்
சாமர்த்தியத்தால்
உடைத்தெறிந்து
வெற்றிப்பாதையில்
தன்தொழிலை
நடாத்திச்சென்ற ஒருவரின்
உண்மைக்கதை.

# வல்லார் ஒருவர்

- சொக்கன்

அவர் ஓர் ஆசிரியர், விவேகி, கணித விற்பன்னர், சிறு வயதிலே தனது மாமனாரின் வழிகாட்டலில் அச்சுக் கலையிலும் நன்கு பயிற்சி பெற்றவர்.

எல்லாப் பாடங்களும் தாய் மொழியை ஊடகமாகக் கொண்டே கற்கவேண்டும் என்ற அரசினரின் அறிவுறுத்தல், அந்த ஆசிரியரின் சிந்தனையைத் தூண்டியது. அக்காலத்தில் தமிழிலே கணித நூல்கள் அருந்தலாகவே இருந்தன.

ஆசிரியர் தமது கணித ஆற்றலையும், கற்பிக்கும் திறனையும் மூலதனங்களாய்க் கொண்டு கணித நூல்களை மாணவருக்குப் பயன்தரத் தக்கவகையில் எழுதி வெளியிட வேண்டும் என்று உறுதி பூண்டார். உறுதி, செயல் உருவம் பெற்றது. படிமுறை எண்கணித நூல்களை எழுதி அச்சேற்றினார்.

அச்சேற்றியாயிற்று, நூல்கள் விற்பனையாக வேண்டுமே! பட்டங்கள் எவையும் பெறாத சாதாரண தமிழாசிரியரின் திறமையை மட்டும் நம்பிக் கல்வியுலகம் அவரின் நூல்களைப் பாடசாலைகளிலே பயன்படுத்த ஆயத்தமாய் இல்லை.

ஆசிரியர் சோர்ந்துவிடவில்லை. கத்தோலிக்கரான அவர், பிரபல கத்தோலிக்கக் கல்லூரியான சம்பத்திரிசியார் கல்லூரியிலே தமது கணித நூல்களை முதலில் அறிமுகம் செய்து வைத்தால், காலக்கிரமத்தில் மற்றைய பாடசாலைகளும் அந்தக் கல்லூரியைப் பின்பற்றும் என்று நம்பினார்.

சம்பத்திரிசியார் கல்லூரியிலே மாணவருக்குப் பாடப் புத்தகங்களை விற்பனை செய்யும் நூல் நிலையமொன்று இருந்தது. அதன் பொறுப்பாளரான புனித பிதா, ஆசிரியருக்கு நன்கு அறிமுகமானவர்.

ஒருநாள் ஆசிரியர் தமது புத்தகக் கட்டுக்களோடு கல்லூரி நூல்நிலையம் சென்று தமது வருகையின் நோக்கத்தைப் புனித பிதாவுக்கு எடுத்துரைத்தார். அவரை ஆதரிக்கவும் உதவி ஊக்கவும் புனித பிதா விரும்பிய போதிலும் அவருக்கு ஒரு தடை இருந்தது.

''மாஸ்டர் இங்கே பாருங்கள். கரவெட்டி புனித இருதயக் கல்லூரி ஆசிரியர் தோமஸ் ஈப்பன் எழுதிய கணித புத்தகங்கள் இங்கே நிரம்பிக் கிடக்கின்றன. இவைதான் எங்கள் கல்லூரியில் பயன்படுத்தப்படுகின்றன. அதனோடு இவற்றை விற்காவிட்டாலும் கல்லூரிக்குக் கைப்பொறுப்பாகிவிடும் ஒரு வருடம் பொறுத்திருங்கள். அடுத்தவருடம் உங்களின் புத்தகங்களை அறிமுகம் செய்யலாம்'' என்றார் புனித பிதா.

ஆசிரியர் சிறிது யோசித்தார். ''ஃபாதர் ஈப்பனின் புத்தகங்களை என்னிடம் தாருங்கள். அவற்றின் பெறுமதிக்கு ஈடாக எனது புத்தகங்களைத் தருகிறேன். இதனால் உங்கள் கல்லூரிக்குக் கைப்பொறுப்பு ஏற்படாது நானும் என்னுடைய புத்தகங்கள் அறிமுகமாகக் காத்திருக்கவேண்டியிராது'' என்றார்.

புனித பிதாவும் அவரின் ஆலோசனை சரியானது என்று ஏற்றுக்கொண்டார். புத்தகங்கள் கைமாறின.

புத்தகங்களை மாற்றீடாகப் பெற்றுக் கொண்டவர், உடனேயே அடுத்த கட்டமாய் என்ன செய்யலாம் என்பதையும் முடிவெடுத்துக் கொண்டார். ஈப்பனின் கணித நூல்களைப் பெற்றுத் தமது மிதிவண்டிக் கரியரில் ஏற்றினார். தமக்கு நெருங்கிய நண்பரான அமரர் சண்முகம்

குமாரசுவாமியின், 'சண்முகநாதன் புத்தக சாலை'க்குச் சென்று குமாரசாமியிடம் அந்த நூல்களை விற்பனை செய்யக் கையளித்தார்.

''அன்று நான் அந்த முடிவு எடுத்திரா விட்டால், ஒரு வருடம்வரை எனது புத்தகங்கள் என்னிடமே தேங்கிக் கிடந்திருக்கும். அடுத்த வருடம் என்ன நேர்ந்திருக்குமோ? யார் அறிவார்?

''எனது புத்தகங்களுக்கு விரைவில் கிராக்கி ஏற்பட்டது. பொருளாதார ரீதியிலும் அவை எனக்கு வாழ்வளித்தன. அச்சக உரிமையாளர், புத்தகசாலை உரிமையாளர், சமாதான நீதிபதி, 'விவேகி' மாத சஞ்சிகை ஆசிரியர், 'மனம் போல மாங்கல்யம்' முதலிய நூல்களின் ஆக்கியோன் என்ற பல்வேறு துறைகளில் நான் எடுத்த தீர்மானமே காரணமாயிற்று'' என்று கதையோடு கதையாக அவர் கூறியது இன்றும் நினைவில் நிழலிடுகின்றது.

விவேகியான அந்த ஆசிரியர் யார்?

சமாதான நீதிபதி, மூ. வி. ஆசீர்வாதம் அவர்களே!


ஆசீர்வாதம் அவர்களின் மகன் விஞ்ஞான பட்டதாரி, சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் (இன்று அவர் வெளிநாட்டில் கடமை புரிகிறார், ஆசீர்வாதம் படிமுறை எண்கணிதத்தோடு படிமுறைக் கணித நூல்களையும் (Mathamatics Books) எழுதி வெளியிட விரும்பியபொழுது) அந்த நூல்கள் கல்வியுலகில் அங்கீகாரம் பெறத் தமக்குப் பல்கலைக்கழகப் பட்டம் எதுவும் இல்லையே என்பதால், தமது மகனின் பெயரில் கணித நூல்களை எழுதி வெளியிட்டதும் அவரது விவேகத்தின் சிறப்பையே எடுத்துக் காட்டுகின்றது. அவருடைய கணித நூல்களுக்கும் மவுசு ஏற்பட்டது. யாழ்ப்பாணக் கல்வியுலகு பட்டங்களுக்குக் கொடுக்கும் 'போலி' மவுசும் தெரியவந்தது.

அச்சக முதலாளி என்ற வகையில் சிறந்த தொழில் கொள்வோராயும் (Employer) ஆசீர்வாதம் விளங்கியுள்ளார். ஒரு தடவை புத்தாண்டு வாழ்த்திதழ் ஒன்றை ஒருநாள் தவணையில் அச்சடித்துத் தரல்வேண்டும் என்ற கோரிக்கையோடு ஆசீர்வாதத்தினை வாடிக்கையாளர் ஒருவர் நாடிவந்தபொழுது, தொழிலாளர்கள் தாங்கள் விடுமுறையிற் செல்ல இருப்பதால் அந்த வேலையைச் செய்யவியலாது என்று மறுத்தார்கள்.

''நல்லது, நீங்கள் போகலாம், நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று அவர்களுக்கு விடை கொடுத்த ஆசீர்வாதம், வாடிக்கையாளரிடமிருந்து வேலையை ஏற்றுக்கொண்ட பொழுது வாடிக்கையாளர் உட்படத் தொழிலாளர்களும் வியப்பும் திகைப்பும் அடைந்தார்கள். ஆனால் ஆசீர்வாதம் தமது முடிவை எவருக்கும் வெளியிடவில்லை.

அடுத்தநாள் ...

தொழிலாளர்கள் வேலைக்கு வந்தபொழுது மேசையில் வாடிக்கையாளரின் 'புத்தாண்டு வாழ்த்திதழ்'கள் அச்சிடப்பட்டு அழகாகப் பொதிசெய்யப்பட்டு இருப்பதைக் கண்டார்கள்.



கணவன்: கோயிலுக்கு போனாய் சாமி தரிசனம் கிடைச்சுதா?

மனைவி: கள்ளர் தரிசனம் தான் கிடைச்சுது இரவு சாமி களவுபோட்டுதாம்.

கி. யோகன் - கல்வியங்காடு

---

அச்சுக் கோர்த்தல், அச்சடிக்கவேண்டிய அளவிற்கு அட்டைகளை வெட்டுதல், அச்சாக வேண்டியதை ஒழுங்குபடுத்தல் (Lay out), அச்சடித்தல் என்ற பலதரப்பட்ட வேலைகளை- ஒவ்வொன்றும் அவ்வத்துறையிலே அனுபவம் பெற்றோர் செய்ய வேண்டியவை - ஓர் இரவில் தாம் ஒருவராகவே ஆசீர்வாதம் செய்து முடித்திருந்தார்!

வாடிக்கையாளர் வந்தார். முட்டையிலே மயிர் பிடுங்கும் நுணுக்ககாரரான அவரே,

அட்டையின் ஒழுங்கமைப்பையும், ஒரு பிழை கூட ஏற்படாமையையும், அழகையும் பார்த்து வியந்து வரயில் கைவைத்தார்.


● ● ●

தொழிலாளர்கள் ...?

அதன்பிறகு எந்தக் காலத்திலும் அவர்கள் தங்கள் கடமைகளில் பின்னடித்ததில்லை. ''இவருக்கு என்ன தெரியும்? நாம் விரும்பியவாறு செய்யலாம், என்று அலட்சியமாகச் செயற்பட்டதும் இல்லை'' என்று எனக்கு ஒரு தடவை அவர் சொன்னார்.

தொழிலிலே கறாராக இருந்தபோதிலும் தொழிலாளரை அன்புடன் நடத்தவும், அனுதாபத்தோடு அவர்களின் தேவைகளை நிறைவு செய்யவும் அவர் தவறியதில்லை. சிலகாலம் அச்சகத்தில் வேலைகள் நடவாது தம்பித்த வேளையிலும், அவர்களுக்கு வேறுசில பணிகளை அளித்து வேதனம் கொடுக்கவும் அவர் பின் நிற்கவில்லை.

---



ஆசிரியர்: 'ஏன் புத்தகக்கடையை மூடிவிட்டீர்?

கடைக்காரர்: புத்தகம் இப்ப விக்குதில்லை. சாராயக்கடையா மாத்தப் போறன். இப்ப யாழ்ப்பாணத்தில் அதுதான் நல்ல பிஸினஸ்.

வி. மோகன்- யாழ்ப்பாணம்.

---

'சில மாதங்களுக்கு வேலை எதுவும் கொடுக்காமலே நான் சம்பளம் வழங்கியிருப்பேன். ஆனால் அவர்கள் வேலை செய்யாது தானம் பெறுவதாக நினைத்துத் தாழ்வுச் சிக்கலில் ஆழக்கூடாது என்பதாலேயே வேலையும் வழங்கிச் சம்பளமும் கொடுத்தேன்' - ஆசீர்வாதம்

● ● ●

ஆசீர்வாதம்,

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'

என்ற வள்ளுவத்தை நன்கு உணர்ந்து கடைப்பிடித்தவர். தமது 'விவேகி' சஞ்சிகைக்கு அக்காலத்தில் செயல் துடிப்பு மிக்கவர்களாயும், இளமையும் எழுத்து வன்மையும் மிக்கவராயும் விளங்கிய செங்கையாழியான் (இவர் இன்றும் செயல்துடிப்பு மிக்கவரே), செம்பியன் செல்வன் இருவரையும் துணையாசிரியர்களாய் நியமித்து 'விவேகி'யைச் சுமார் பத்தாண்டுகளுக்கு மேல் திறம்பட நடத்திவந்தார்.

நாட்டுக் கூத்துக் கலையின் பரமரசிகர் அவர். ஏட்டுப் பிரதிகளாயிருந்த பல நாட்டுக் கூத்துக்களை இலாப நோக்கின்றி அச்சிட்டு வெளிப்படுத்தியதோடு, நாட்டுக்கூத்துக் கலைஞரான பூந்தான்யோசேப்பு அவர்களை ஆதரித்து அவரின் நாடக அரங்கேற்றங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த வகையிலும் தாமே 'மனம் போல மாங்கலியம்' என்ற நாட்டுக்கூத்தை (நாடக மகாகவி ஷேக்ஸ்பியரின் As you Like It' இன் தழுவல்) எழுதி நூல் வடிவில் வெளியிட்டு, அரங்கேற்றம் செய்த வகையிலும் அக்கலைஞர்களால் என்றும் நன்றியுடன் அவர் நினைவுகூரப்படவேண்டியவர்.

எழுத்தாளர் பலரின் நூல்களை அவர்களின் நிலையறிந்து குறைந்த செலவில் அச்சிட்டு வெளிப்படுத்தியதையும் நாம் மறந்துவிடல் இயலாது. இவ்வகையில் எனது 'ஞானக்கவிஞன்' (குறுநவீனம்), மூதறிஞர் அமரர் க. சி. குலரத்தினம் அவர்களின் நோத் முதல் கோபல்லாவ வரை என்ற நூல்களையும் அவர் வெளியிட்டதை நினைவு கூர்கின்றேன்.

சிறந்த கத்தோலிக்கரான அவர், 'விவிலிய நூலினை' அக்காலத்திலேயே எழிலும், புதுமையும் பொதுளும் வண்ணம் நூலாய் வெளியிட்டார். அவருக்குச் சோதிடக் கலையிலும் திறமை இருந்தது. (சோதிடநூல் ஒன்றும் அவரால் வெளியிடப்பட்டது)

சாதாரண குடும்பம் ஒன்றிலே பிறந்து தமது விவேகத்தினாலும், அயராமுயற்சியாலும், பல்துறைத் திறமையினாலும், 'தம்புகழ் நிறுவித் தாம் மாய்ந்த' வல்லாரான மு. வி. ஆசீர்வாதம் ச. நீ, அவர்களின் வாழ்க்கை, இன்றைய இளைஞருக்கு நல்லதொரு பாடமாக அமையும். ●

---

ஹைக்கூ

தாயுள்ளத்தோடு
ஆட்டின் முதுகிலிருந்து
உண்ணிகளை அகற்றுகிறார்
விடுமுறை நாளில்
இறைச்சிக்கடைக்காரர்.

- தணிகைச்செல்வன்

# வாசகர் நெஞ்சம்

திரு. சுந்தர் அவர்களையும் 'சிரித்திர'னையும் இழந்த ஏக்கத்தைப் போக்குவதற்கு வந்துள்ள 'சுந்தர'னுக்கு மன மார்ந்த வாழ்த்துகள்.

மலர் 2ன் அட்டைப்படம் என்னை மிகவும் கவர்ந்தது, காலத்தோடு ஒட்டியதாக அமைந்திருந்தது.

மலர் 1ல் கே. ஆர். டேவிட் அவர்களின் 'குடிநிலம்' சிறு கதை அற்புதமாக அமைந்திருந்தது, நமது மண் அவரது கதை களில் தனியிடம் பிடித்துவிடுகிறது, 'வாழ நினைத்தால்' கட்டுரை வந்தபின்பும் நாம் வேள்வியை விட்டுவிடவில்லை.

நகைச்சுவை என்ற கலை எல்லோருக்கும் கைவராது, 'சுந்தர'னில் 'சிரி' இல்லாவிட்டாலும் சிரித்திரனை அடியொற்றி வருவதால் நசைச்சுவையை நாம் அதிகம் எதிர்பார்ப்பதில் தவறில்லை.

சென்ற இதழை வாசித்ததுமே எழுத எண்ணிய எண்ணம் இன்றுதான் ஈடேறுகிறது. என்ன செய்வது? ''தான் நினைத்த மாத்திரத்தில் கூவும் குயிலுணர்வு'' என் மனத்திற்கு மட்டுந் தானிருக்கிறது.

சிறந்த கவிதைகளை எமக்கு அளித்து வரும் இளங்கவிஞர் ஜெயசீலனுக்கு மனமார்ந்த பாராட்டுகள்.

அன்புடன்,
**சி. யோகேஸ்வரி**
யாழ்ப்பாணம்.

---

சுந்தரன் இதழ் 2 கிடைக்கப் பெற்றேன் த ஜெயசீலன் அவர்களின்வாழ்க்கைப் போர் கவிதை மிகவும் அற்புதம் அத் துடன் உலக அதிசயங்கள், உயிரோடு கலந்த... சிறுகதை என அனைத்து அம்சங்களும் என் உயிரோடு கலந்தது இன்னும் புதிய அம்சங்களு டன். புதுப்பொலிவுடன அடுத்துவரும் சுந்தரன் இதழ் கள் மிளிரவேண்டும் என விரும்புகிறேன்.

**க. பகீரதன்**
கெழும்புத்துறை.

---

'சுந்தரன்' இதழ் கண்டு மகிழ்ந்தேன். ஓவியர் ரமணி யின் காட்டூன் – சி.கு. மூலம் கூறிவரும் நல்ல கருத்துக் கள். நல்ல நெறியாள்கை; வாழ்க சுந்தரன் தொடர்க அதன் பணி.

அன்புடன்
**கே. இராஜகோபால**
பொன்மனை, தொல்புரம்

---

சுந்தரா!

சித்திரையில் முத்திரை பதித்தாய்
நித்திரையில் கண்விழித்தாய்

உன் மலர் கண்டு ஆனந்தம் கொள்ளும் வண்டுகளில் நானும் ஒருவன். உனது இதழ் சிரிக்க சிந்திக்க வைத்தது.

வாழ்க மலர் தொடர்க உன்பணி.

**மாயக்கை S. மதி**

---

சுந்தரன் 2ம் இதழ் கண்டேன், மகிழ்ந்தேன். சிரித்திரன் இல்லாத குறையை சுந்தரன் போக்குவது மகிழ்ச்சி. சகல விடயங்களும் வரவேற் கத்தக்கன. ஆனால் குறுக்கெழுத்து போட்டி ஒன்று நடத்தலாமே. மேலும் சுந்தரன் அட்டைப்படம் தற்போது நாட்டில் நடைபெறும் உண்மை சம் பவம்.

**கு. உமாகாந்**
யாழ்ப்பாணம்.

---

ஐயா,

''சுந்தரன்'' கண்டேன்.
மிக்கமகிழ்ச்சி.

சிரித்திரனார் வழி நடக்கும் உங்கள் வழியே என் வழியுமாகும். மாணவனாகிய என்னையும் என் சக தோழர்களையும் சுந்தரன் தன்சிறப்பால் செய்ம்மறக்கச் செய்து விட்டான்.

வாழ்க வளர்க அவன் பணி.

அருமையான ஆசிரியர், சிறப்பான நெறியாள்கை, எடுப்பான ஓவியங்கள் அனைத்தும் அற்புதம்.

எனினும் ஒருமுறை-

அச்செழுத்துகள் சற்று சிறுப்பிக்கப்பட்டு (பார்வை தெளிவில்லாதோர் மன்னிப்பார்களாக) ஒவ்வொரு பக் கத்திலும் ஒரு புத்தகத்தையே அடக்குமளவு விடயங்களை இடம்பெறச் செய்தால் சுந்தரன் மேலும் எடுப்பான தோற்றத்தைப் பெறுவான் என நினைக்கின்றேன்.

சு. பிரதீப் (தீபன்)
ஆண்டு 13 'B'
யா/இந்துக்கல்லூரி.



# தட்டுங்கள்.....

# திறக்கப்படும் ?!

த. அருணன் - யாழ்ப்பாணம்.

1. ? ஒருவன் எப்படி வாழவேண்டும்? எப்படி வாழக்கூடாது?

! தன் வியர்வையில் வாழவேண்டும், மற்றவர் இரக்கத்தில் வாழக்கூடாது.

சி. உஷா – யாழ்ப்பாணம்.

2. ? காதல்-காமம் இடையிலான தொடர்பு யாது?

! காதலித்து பின் திருமணம் செய்ய முடியாமல் போனவர்களை காதலில் தோல்வி அடைந்தவர்கள் என்று கூறுகிறோம். திருமணம், காமத்தின் அனுமதி. ஆகவே காதலின் வெற்றி என்பது திருமணத்துள் அனுமதிக்கப்பட்டிருக்கும் காமத்துள் நிறைவெய்துகிறது. இரு உள்ளங்களின் சேர்க்கையான காதல், இரு உடல்களின் சேர்க்கையான காமத்தில் முடிவடைகிறது. காதல் ஒருபாதை, அது சேரும் இடம் காமம். இரண்டும் சேர்வது நிறைவு. ஆனாலும் காதல் இல்லாத காமம் உண்டு, காமம் இல்லாத காதல் இருக்க வழியில்லை.

பா. சுமதி – நல்லூர்.

3. ? கவிதை செத்து விட்டதா?

! இயற்கையே கவிதை - அதை
இழைத்தவன் இறைவன்
இயற்கையுள்ளவரை
கவிதைக்குள் உயிர் இருக்கும்.
கவிதையுள்ளவரை
கவிஞனுக்குள் உயிர் இருக்கும்.
அது செத்து விட்டால்
நீயும் நானும் வெற்றுப் பிணங்கள்!

4. ? இளைஞன், கவிஞன், அரசன் இவர்களில் யாரை நம்புவீர்?

! இளைஞன் தன்வேகத்திற்கேற்ப செயற்பட்டு, அவசரத்தில் விழுந்து மீளமுடியாமல் தவித்துக்கொண்டிருப்பவன். தன்னை சரியான பாதையில் இட்டுச்செல்ல தடுமாறுபவனை நான் எப்படி நம்பமுடியும்?

கவிஞன் இயற்கையோடு இயற்கையாய்ப் பிறந்தவன். அதிக கற்பனையால் படைத்தவனோடு பங்குபட்டவன். அவன் எனது நம்பிக்கைக்கு அப்பாற்பட்டவன்.

அரசனை தாராளமாக நம்பலாம். அவன் தானே இப்போது இல்லையே!

ப. சுரேஷ் - இருபாலை.

5. ? பூமியை மோதி அழித்துவிட வால்வெள்ளி ஒன்று நாளை வருகிறது. இன்று நீர் என்ன செய்வீர்?

! ஆகா...! அந்த அழகைக்காண என்னை ஆயத்தப்படுத்திக் கொள்வேன்.

S. பாபு - யாழ்.

6. ? ஆயுதங்களால் மாற்றமுடியாத மனித குணத்தை அச்செழுத்தால் மாற்றமுடியுமென்றா பத்திரிகை தொடங்கினீர்?

! அச்செழுத்தும் ஒருவகை ஆயுதம் தான்.

பெ. ஜெகா - வண்ணை.

7. ? போகிறபோக்கில் நாடு...?

! அணுகுண்டு அவசியமில்லை.

செல்வி கு. சுகந்தி.

8. ? சுந்தரனின் எதிர்கால இலட்சியம் என்ன?

! வாழ்வில் நம்பிக்கையை ஊட்டுவது.

யோ. நிலானி

9. ? எம்மைப் புரிந்து கொண்ட ஒரு நல்ல நண்பன் கிடைக்க வேண்டுமாயின் நாம் என்ன செய்ய வேண்டும்?

! நாம் நல்ல நண்பனொருவனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

யோ. துளசி, நல்லூர்.

10. ? ஆசை என்றால் என்ன?

! வானளாவிய உயரத்திற்கும் அதல பாதாளத்திற்கும் எம்மைக் கூட்டிச் செல்லும் வாகனம்.

வி. கரன்
பிரவுண் வீதி.

11. ? வாழ்க்கை என்றால் என்ன?

! இன்பத்தை இலக்காகக்கொண்ட மரணத்தை நோக்கிய பயணம்.

ஜே. ராஜ்.

12. ? போர் - சமாதானம் – இரண்டுக்கும் இடையிலான தொடர்பு என்ன?

! பேச்சுக்கும் செயலுக்கும் இடையிலான மிக நெருங்கிய தொடர்பு.
பேச்சு = சமாதானம். செயல் = போர்.

திருமதி சகுந்தலா.
குருநகர்.

13. ? இடம்பெயர்ந்த மக்கள் வீட்டில் களவெடுப்பவர் பற்றியும், இரவில் கசிப்பு குடிப்பவர் பற்றியும் என்ன நினைக்கிறீர்கள்?

! அப்பாவி மக்களின் நெஞ்சில் பற்றி எரியும் கொடுந்தீயினைத் தம்குடிக்கு சேர்ப்பவர்கள்.

கொடும்பாவிகளை முச்சந்தியில் நிறுத்தி ஊரெல்லாம் உமிழ்ந்து கொட்டும் உமிழ் நீரில் மூச்சடக்கிச் சாகடிக்கவேண்டும்.

நாகமணி மகேந்திரலிங்கம்,
பழனி, தென்கோப்பாய்.

14. ? உலகம் அழிவுப்பாதையின் இறுதிக்கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கும் வேளையில் வேலிச்சண்டை செய்து கோட்டுக்குச் செல்பவர் பற்றி தங்கள் கருத்து?

! தமக்குக் கொள்ளிவைக்க வேலிக்கதியாலாவது உதவும் என்று நினைக்கிறார்களோ!

ப. தெய்வேந்திரன்
யாழ்ப்பாணம்.

15. ? மனிதன் எப்போது தெய்வமாகிறான்? எப்போது மிருகமாகிறான்?

! தனது உடலை விட்டபோது தெய்வமாகிறான். மிருகங்களின் நற் குணங்கள் சிலபோது மனிதனையும் சீண்டும்போது மனிதன் மிருகமாகிறான்.

க. பகீரதன்
கொழும்புத்துறை.

(பரிசுக்குரிய கேள்வி)

16. ? கட்டுப்பாடுகள் அதிகரிக்கும்போது பிள்ளைகளின் துர்ப் பழக்கவழக்கங்களும் அதிகரிக்கும் என்பது உண்மையா?

! கட்டுப்பாடுகள் அவசியத்தைப் பொறுத்து தேவைதான். அதிக கொடூரமான கட்டுப்பாடுகள் பிள்ளைகளை துர்ப்பழக்கத்திற்கு இட்டுச்செல்லும் என்பது உண்மையே. ஆனால் கட்டுப்பாடுகள் தேவை. அவற்றை அவசியமானது என்று உணரும் பக்குவத்தை பெற்றோர் பிள்ளைகளுக்கு ஏற்படுத்த வேண்டும்.

ஒரு விரால்மீன் கடலிலிருந்து மேல் பகுதிக்கு வரும்போதெல்லாம், மேலே பறந்து திரியும் பறவைகளைப் பார்த்து ஆச்சரியப்படும் – 'ஆகா! எவ்வளவு சுதந்திரமாக அவை திரிகின்றன, எனக்கு மட்டும் இந்த கட்டுப்பாடான அடிமை வாழ்வு' என்று ஏங்குமாம். அதற்கு ஒரு முறை தாங்கமுடியவில்லை. 'இதென்ன கட்டுப்பாடு - இதென்ன கொடுமை – இனியும் இந்தக் கட்டுப்பாட்டுக்குள் என்னால் வாழமுடியாது' என்று, துடித்து எழுந்து கரையில் வந்து விழுந்தது. ஒரு சில நிமிடங்கள்தான்; அந்த விரால்மீனின் வாழ்வு முடிந்துவிட்டது.

ஒரு கட்டுப்பாட்டுக்குள் தான் இந்த இயற்கையே இயங்குகிறது. கொஞ்சம் மீறினாலும் - இந்த உலகமே சிதறிப் போய்விடும்.

# ‘சுந்தரன்’ பொது அறிவுப் போட்டி-3

## பரிசு ரூபா 200/-

பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையெழுதிப் பரிசினை வெல்லுங்கள். உங்கள் விடைகளை ஒரு தாளிலேயே நிரப்பி ‘சுந்தரன்’ 252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 10 - 07 - 1998க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். உங்கள் கடித உறையின் மேல்பகுதியில் ‘சுந்தரன்’ பொது அறிவுப் போட்டி - 3 எனக் குறிப்பிடுக. ஒன்றிற்கு மேற்பட்ட சரியான விடைகள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் எழுத்து, ஒழுங்கு, விடையளிக்கப்பட்டமுறை போன்றவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

1. உலகத்தின் மிக நீளமான புகையிரதப் பாதை எது?
2. ஐரோப்பாவின் நோயாளி யார்? [எந்த நாடு?]
3. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் இன்றைய ஆதீனகர்த்தா யார்?
4. அதிக சந்திரன்களைக் கொண்ட கோள் எது?
5. இலங்கையில் வெளிவரும் தமிழ்த் தினசரிகள் எவை?
6. சிரித்திரன் சுந்தரின் புகழ்மிக்க கதாபாத்திரம் யார்?
7. ‘‘கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்...’’ என்ற புகழ்பெற்ற பாடலை *T. M.* சௌந்தரராஜன் பாடியுள்ளார். இந்தப் பாடலை இயற்றியவர் யாழ்ப்பாணத்துக் கவிஞராவார். அவர் யார்?
8. யாழ்ப்பாண வீதிகளில் தெரு விளக்குகளை மீண்டும் அறிமுகம் செய்து வைத்த அதிகாரி யார்?
9. ஊர்காவற்றுறைக் கடற் கோட்டையின் பெயர் யாது?
10. 175 ஆவது ஆண்டு நிறைவுநாளைக் கொண்டாடிய யாழ்ப்பாணப் பாடசாலை யாது? (மே, 1998 இல் கொண்டாடியது.)

இவ்விலாசத்தினைக் கத்தரித்து அனுப்ப மறவாதீர்கள்

ஆசிரியர்,
சுந்தரன்,
252, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# சுந்தரன் பொது அறிவுப் போட்டி - 2

**சுந்தரன் பொது அறிவுப் போட்டி - 2க்கான விடைகளைப்**

*பல நேயர்கள் எழுதியிருந்தனர்:*

**அதற்குள் சரியாகவும், தெளிவாகவும் எழுதிய நேயர்**

## தி. உதயகலா

*கைதடி வடக்கு, கைதடி.*

**அவர்களுக்குப் பரிசு வழங்கப்படுகிறது. அவருக்கு சுந்தரனின் சுந்தரப் பாராட்டுக்கள்.**

பாராட்டுப் பெறும் நேயர்:

**கரவை. தனு**
*சாய் இல்லம்,*
*கரவெட்டி மத்தி,*
*கரவெட்டி.*

## விடைகள்

1. திபெத்
2. ஜூன் 05
3. சப்பிரகமுவா மாகாணம் / இரத்தினபுரி
4. சங்கிலி செகராசசேகரன்
5. மின்னோட்டத்தை அளவிடும் கருவி
6. காபறேற்றர்
7. 234 ( 333 ) 567
   345 ( ? ) 678
   (அடைப்புக்குள் வரும் எண் ஒன்றிலிருந்து ஒன்றினைக் கழித்ததால் பெறப்பட்டது)

   567 - 234 = 333
   678 - 345 = 334
   எனவே விடை - 334
8. 16 (நிரலாகக் கூட்டும்போது 40 வரும்)
9.

| 31 |
|---|
| 185 |

(இந்த வினா பலருக்குச் சங்கடத்தைக் கொடுத்துள்ளது: முதல் வரி பின்வருமாறு அமையும் - வர்க்கித்து 1 2 3 4 5 எனக்கழித்தல்)

$2 \times 2 = 4 - 1 = 3.$
$3 \times 3 = 9 - 2 = 7$
$4 \times 4 = 16 - 3 = 13$
$5 \times 5 = 25 - 4 = 21$
$6 \times 6 = 36 - 5 = 31$

அடுத்த வரி பின்வருமாறு அமையும்: கனமூலம் கண்டு மேலமைந்த எண்ணைக் கழித்தல்)

$2 \times 2 \times 2 = 8 - 3 = 5$
$3 \times 3 \times 3 = 27 - 7 = 20$
$4 \times 4 \times 4 = 64 - 13 = 51$
$5 \times 5 \times 5 = 125 - 21 = 104$
எனவே: $6 \times 6 \times 6 = 216 - 31 = 185$

10. கிளிநொச்சி பாதைப்பிள்ளையார், அந்த வழியாகச் செல்பவர்கள் இறங்கி வணங்கிச்செல்வர்

(10ம் கேள்விக்கான விரிவான விளக்கமொன்று 28ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது)

---

நீதிபதி: இவர் இந்தக் கொலையைச் செய்யும் போது நீர் கண்களால் பாத்தீரா?

சாட்சி: அந்த நேரத்தில் பயத்தினால் கண்ணை மூடிவிட்டேன் ஐயா:

நாகமணி மகேந்திரலிங்கம்

# விலங்குகள்

- சஞ்சயன் -

தொழுவத்து மாடுகள்
நகரத்துள்!
பச்சைப்புற்களை விட்டு
ஒரு பஷனுக்காக
சுவர்களில் தூங்கிவழியும்
''கலர் போஸ்டர்களை
விழுங்கத் தொடங்கியுள்ளன!
தெருவோரங்களில்
கழுநீர் தீர்த்தமாடி
நரகத்து வார்த்தைகளை
மந்திரமாக்கி
வீதி நடுவில்
மல்லாந்து கிடக்கும் மாடுகள்:
சொற்கம் தேடி!

புத்தகங்களும் இப்போது
''நீலவர்ண''ப் பெட்டிக்குள்
விலையாகிப் போகின்றன;


குசினி அடுப்புகளும் கூட
''பன்னீரில் எரிகின்றனவாம்!

வேலி யோரங்களில்
பருவம்முற்றாத நாய்கள்
வெயிலென்றில்லாமல்,
கடிபாடுகளில்
வாலுயர்த்தி கெம்பி நிற்பதும்,
வலி எடுக்க ஓடிப்போவதும்.
ஒரே நாய்ச்சேட்டை;
வீடுகளில் தூக்கமில்லை!

எதைக்கேட்டாலும்
விரித்து வைத்து படைத்துவிட
பணம் தின்னிக்கழுகுகள்
ஏராளம்! தாராளம்

அச்செழுத்துக்களை
இரைப்பைக்குள்
திணித்துக்கொண்ட
களஞ்சியங்களும்
மௌனித்திருக்கின்றன
ஒரு மாற்றத்தின் நிகழ்வென்று!
மாற்றம் தேவைதான்.
அதற்காக
சோற்றுக்குப் பதிலாக
மலங்களையா சுவைப்பது?

இரண்டாயிரம் ஆண்டில்
உலகம் அழிகிறதோ இல்லையோ
நம் தேசம் மட்டும்
மனிதனை அழித்து
ஒரு வித விலங்குகளை
தோற்றுவிப்பது மட்டும்
நிட்சயம்! □



# புல்

கண்ணீர் விழுந்தது
கன்னத்தின் மேல்
கன்னம் அவள்
கை மணிக்கட்டு மேல்.
ஏனெனில்,
அழுகின்றது குழந்தை
அவள் வலத்தொடை மேல்.
குழந்தைமேல்
அவள் எண்ணம் இல்லவே இல்லை.
ஏனெனில்,
அவள் எண்ணத்தில் இருந்தவன்,
பூமிமேல் இல்லை.
.... புல் முளைத்துவிட்டது
அவன் மேல்.

- எஸ். வைத்தீஸ்வரன்
(நன்றி – சுபமங்களா)

# விழித்தெழு!

- ச. முகுந்தன்

தோழா உன்காதுகொடு துப்பறியும் நாவலுக்குள்
நாளைக் கசக்கும் நடைமாற்று! சிந்திப்போம்
கடிகார முட்தறியில் கம்பளியின் கூடத்துள்
கனவுடுப்பு நெசவுசெய்தாய் காணுமினி! நண்பகலில்
இடிபட்டு ரிக்கற் எடுத்தோடி இருட்டுக்குள்
குருடாகச் சம்மதிக்கும் குணம்மாற்று! இலட்சியத்தை
வெண்திரையிலிருந்து உன்விழித்திரைக்குள் சிறையெடுநீ.

மின்சாரம் போன்றமனம் மின்கம்பி போன்ற உடல்
இன்றிருக்கும்! இக்கணமே இயன்றதெல்லாம் செய்துமுடி
ஓய்வைத்துற ஆனால்மெய் ஓய்விலுள்ள இன்பத்துள்
தோய்வதற்காய் தான்இந்த உலைச்சல் இதையுணர்ந்து
பாயில் கிடந்தாலும் பாய்ந்துகொண்டே இருமனதுள்.

வானைப்பார்! கிழட்டு நரைமுகில்கள் கூடத்தம்
வாலிபத்தை யிழந்து வலிபிடிப்பென்று ஓய்ந்திருக்கா
ஏணைகட்டிக் கண்ணுறங்க ஏன்விட்டார் நம்தாய்மார்
கண்ணுறங்கும் போதும்நீ காலகதி உணர்ந்திடத்தான்.

விசித்திரம்தான் ஆனாலும் விரோதிகளைத் தேடிக்கொள்
கருங்காலிக் கட்டைகள்தான் கோடரிக்கு மெய்நண்பன்
புரிகிறதா நண்பா பொய்நட்பில் துருப்பிடித்துப் பொசுக்கென்று உடையாதே!
உரைக்கல்லைச் சேராத பொன்னிற்கு மவுசுண்டோ.

காக்கையினம் கூட கருத்தின்றி கரைவதில்லை
நாக்கை ருசியுணர மட்டும் பயன்படுத்து
விழிகளால் பருகு மூளையினால் எதையும் பார்,
வழியையுணர் இதயத்தால், இயற்கையினை இழுத்துநன்றாய் சுவாசி.

காற்றைப்போல் கரைந்துறைந்து கலக்கிவிடு இச்செகத்தை
உன்னைநீ வெளிக்காட்டல் உனக்கிழுக்கு
கண்ணுக்குத் தெரிந்தால் கடவுளுக்கும் மதிப்பில்லை;
என்பதினை அவரைப் போல் நீயுமுணர்.

துன்பத்தைக் கண்டுசிரி இன்பத்தைக்கண்டும் சிரி
அப்போதே உன்அயலான் உணர்வில்நீ பங்கெடுப்பாய்
அயலை ஆலோசி உன்சுயத்தைச் செயற்படுத்து
ஜெயமுறுதி நண்பா இனிஜெகம் உனதே!

25ம் பக்கம் 10ம் கேள்விக்கான விடையை

மிகவும் விரிவாகவும் விளக்கமாகவும் தந்துள்ளார்

## செல்வி தனுஜா தபேந்திரன் அவர்கள்

அவருக்கு எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

1885ம் ஆண்டு சண்டிலிப்பாயைச்சேர்ந்த P. W. D. ஓவசியர் வைத்திலிங்கம் முறிகண்டி பகுதியில் ஓவசியராகக் கடமை ஆற்றினார். இவர் ஒரு விநாயகர் உபாசகர். தினமும் முறிகண்டிப் பகுதிக்கு கடமை ஆற்றுவதற்கு வந்து மாலையில் பழைய முறிகண்டிக் கோவிலுக்குச் சென்று விநாயகர் பூசை முடித்துத்தான் உணவருந்துவது வழக்கம். இவர் ஓர் ஆசாரசீலர். இவருக்கு ஒரு நாள் விநாயகர் கனவில் தோன்றி முறிகண்டியில் P. W. D. ஆல் வெட்டப்படும் கிணற்றுக்குள் ஒரு விநாயகர் சிலை இருப்பதாகவும் அதை எடுத்து றோட்டுக்கரையிலுள்ள பாலை மரத்தின் கீழ் வைத்து வழிபடும்படியும் கூறினார். அதேபோல இவரின் வேலையாட்கள் P. W. D யால் முறிகண்டியில் வெட்டிக்கொண்டிருக்கும் கிணற்றிற்குள் ஓர் விநாயகர் சிலை இருக்கக்கண்டு அதை எடுத்து விநாயகர் கனவில் கூறியபடி றோட்டுக்கரையிலுள்ள பாலைமரத்தின் கீழ்வைத்து இரவோடிரவாக அதைமூடி ஒரு சிறு கொட்டிலையும் கட்டிவிட்டார். மறுநாள் வெள்ளைக்காரத்துரை [இவருடையமேலதிகாரி] வந்து புதிதாக ஒரு கொட்டிலிருப்பதைக்கண்டு கொட்டிலையும் பிடுங்கி பாலை மரத்தையும் தறிக்கும்படியும் சொன்னார். பாலைமரத்தில் கோடரி கொத்தியதும் இரத்தம் பாலைமரத்தால் பீறிட்டுப் பாய்ந்தது. உடனே வெள்ளைக்காரத்துரை விழுந்து வணங்கி அரசாங்கத்தின்மூலம் இக்கோயிலையும் இதைச்சூழ்ந்த நிலத்தையும் மேற்படி ஓவசியர் வைத்திலிங்கத்திற்கு முதலாம் எலிசபெத் மகாராணியின் அனுசரணையுடன் நன்கொடையாக வழங்கினார். இவரின் [வைத்தியலிங்கம்] மகன் சின்னக்குட்டி என அழைக்கப்படும் கனகசபை என்பவரால் இக்கோயில் பராமரிக்கப்பட்டது. 1941ம் ஆண்டிலிருந்து அவரது (சின்னக்குட்டி) பெறாமகனான செல்லப்பாவினாலும் அவருடைய பிள்ளைகளினாலும் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி செல்லப்பாவின் மூத்தமகளும் மருமகன் திருநாவுக்கரசும் தற்பொழுது கரவெட்டி வதிரியிலிருந்து உடுப்பிட்டி செல்லும் வழியில் 1km தொலைவில் வசிக்கிறார்கள்.

முறிகண்டிப் பிள்ளையாரின் அற்புதங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. அடியாரை ஆபத்திலிருந்து காத்தும், வேண்டிய வரம் கொடுத்தும் அருள் செய்கிறார்.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக திருநாவுக்கரசு குடும்பத்தினர் முறிகண்டிக்குச் சென்று கோயிலை நிர்வகிக்க முடியாத நிலையிலுள்ளார்கள்.

வாசகரிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆக்கங்களுக்கும் சன்மானம் உண்டு. ஆக்கங்கள் தரமாணதாக இருப்பதோடு, தங்கள் ஆக்கங்களை நாம் பாதுகாக்கக்கூடிய தாளில் எழுதிஅனுப்புங்கள். (சிலர் மிகக்குறுகிய தரமில்லாத தாழ்களில் எழுதி அனுப்புகின்றனர். அவை தவறிப்போகும் சாத்தியங்கள் காணப்படுகின்றன)

### சிரிகதைப் போட்டி - 3

தங்கள் ஆக்கங்களை 10 - 07 - 98 க்குமுன் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்து பரிசினை வெல்லுங்கள்.

(சிரிகதைப்போட்டி - 2 க்கான கதைகள் எதுவும் தரமானதாக அமையாததால் இம்முறை எவருக்கும் பரிசு வழங்கப்படவில்லை)

# எங்களைக் கடத்துங்கள்

தலைவாசல் வாங்கில் சர்வதானமாக அமர்ந்திருந்த முருகேசர், அன்றைய காலைப் பத்திரிகை ஒன்றினை விரித்து, அட்டகாசமாக வாசித்தார். அவர் வாசிப்பது, குசினிக்குள் அலுவலாக இருக்கும் பொன்னம்மாவுக்குத் தெளிவாகக் கேட்க வேண்டும். இல்லாவிட்டால், ''என்னவாம். பெலத்து வாசியுங்கோ'' என்று குரல் கொடுப்பாள்.

வழக்கமாகி விட்ட சங்கதி. 'தாவடியில் விமானக் குண்டு வீச்சு.'

'பலாலியில் பதற்றம், மக்கள் வெளியேற்றம்.'

'கண்ணிவெடி வெடித்தது.'

'இராணுவம் சுட்டதில் பத்துப்பேர் பலி!'

ஒவ்வொரு நாளும் 'சுடச் சுடச்' செய்திகள். படித்து வருபவருக்கு அன்றையசெய்தி ஒன்று நிமிர்ந்து உட்கார வைத்தது. கண்களால் செய்



செங்கை ஆழியான்

தியை மேய்ந்தவர், ''பொன்னம்மா, சங்கதியைக் கேட்டியோ?'' என்று வியப்புடன் குரல் தந்தார்.

''என்னவாம் ?''

''வாசிக்கிறன் கேள்... இளைஞன் கடத்தப்பட்டான்.''

''உது பெரிய விசயமே... இங்கு ஒவ்வொரு நாளும் இது நடக்கிறது தானே?''

''விசரி இது வேறை. வடிவாக்கேள் வீதி ஓரத்தில் நின்றிருந்த இளைஞனைக் காரில் வந்த மூன்று பெண்கள் கதறக் கதறக் கடத்திச் சென்றார்கள்...''

அடுக்களைக்குள் மூக்குப்பேணி 'டங்' கென்று நிலத்தில் விழுந்தது. அறக்கப் பறக்கப் பொன்னம்மா எழுந்து, வெளியில் ஓடி வந்தாள்.

'' இதென்ன கலிகாலம்... '' என்று வீரிட்டாள். ''நீங்கள் பிழையா வாசிச்சிட்டியளாக்கும் வடிவாப் பாருங்கோ . வீதியில நின்ற பெண்ணைத்தான், கடத்தியிருப்பான்கள்...''

'' வயது போனாலும் என் கண் கூர்மை கண்டியோ ... ''

''அப்ப பிழையா அச்சுக் கோர்த்திட்டாங்களாக்கும்...''

''அச்சுக் கோர்க்கிற விடயமும் குசினிக்குள்ள இருக்கிற உங்களுக்கு இப்ப தெரியுது எங்கட பொடியள் வெளிநாடுகளுக்கு உழைக்கப் போனான்கள். அதனால் எங்கட பெண்களுக்கு 'பாங்கில டிறாப்ற் மாத்துறது, ரெலக்சில் பேசுறது எல்லாம் தெரிஞ்சுட்டுது...''

''அதை விடுங்கோ... உப்பிடி றோட்டில நிக்கிற பொடியனைக் கடத்துறத்துக்கு, யாழ்ப்பாணப் பொடிச்சியளுக்குத் துணிச்சல் வந்திட்டுதோ?''

முருகேசர் மனைவியைப் பார்த்துச் சிரித்தார்.

''இங்கை இல்லையடி... இது பிரான்சில நடந்தது.''

''பிரான்சிலோ...'' என்று தலையில் கை வைத்தாள் பொன்னம்மா. அப்படியே நிலை குலைந்து கீழே இருந்து விட்டாள்.

''என்ன... என்ன பொன்னம்மா...'' என்று பதறிப்போனார் முருகேசர்:

''மூத்தவன் கணேசன் பிரான்சிலைதானை இருக்கிறான். மறந்திட்டியளே? அவன் லெட்சண மான பொடியன் இங்கயே பொடிச்சியள் பின்னாலும் முன்னாலும் திரிஞ்சவையள் அங்கை அவனை விடுவாளவையே? கணேசன் அங்கினேக்கமிலாந்திக்கொண்டு நின்றிருப்பான். காரில் வந்தவளவை எளிய தேவடியாள்கள் .. தூக்கிக்கொண்டு போயிருப்பாள்கள்! என்ரை பொடியை கதறக் கதறத் தூக்கிக்கொண்டு போனாளவையே? நல்லா இருப்பாளவையோ?''

பொன்னம்மா வைத்த ஒப்பாரி, பக்கத்து வீட்டு மகேஸ் அக்கைக்கும் கேட்டது. 'என்னவோ எதுவோ' என்று பதறியடித்தபடி, பொட்டுக்குள்ளால் நுழைந்து, ஓடிவந்தாள்.

''எடி மகேசு, என்ரை மூத்த பொடியனை பிரான்சில கடத்திப்போட்டாளவை '' என்று தனது வெப்பியாரத்தைப் பொன்னம்மா கொட்ட, 'இவவுக்கு நல்லா வேணும்' என்று மனதுக்குள் கறுவிக்கொண்டு சாட்டுக்கு மகேஸ் அக்கை கண்ணீர் சிந்த, முருகேசர் பேப்பரை ஓங்கி வாங்கில் அடித்தார்.

''பேப்பரில் உன்ர மகன் என்று போட் டிருக்குதே, விசரி தேவையில்லாம ஊரைக் கூட்டுறாய் ''

''என்ரை பெத்த வயிறு பத்தி எரியுது . உங்களுக்குத் தெரியுமே ?''

''இப்ப என்ன செய்யச் சொல்லுறாய்...?''

'' ஈழமுரசுக்குப் போன் பண்ணிக் கேளுங்கோ இல்லாவிட்டால் ஈழநாட்டுக்குப் போன் பண்ணுங்கோ இல்லாவிட்டால் பிரான் சுக்கு 'ரெலெக்ஸ்' ஒண்டு கொடுங்கோ ''

முருகேசுக்கு வியப்பு ஏற்பட்டது. மனைவிக் குத் தெரிந்திருந்த தகவல்களைக் கேட்க.

இவ்வளவும் தலைவாசலில் நிகழும்போது, அறைக்குள் தன்னை அலங்கரிப்பதில், முருகேச னின் இரண்டாவது சற்புத்திரன் சொர்ணலிங்கம் ஈடுபட்டிருந்தான்.

கூவுகிற பருவம்.

தகப்பன் படித்த செய்தி காதில் விழுந்திருந் தது. வியப்பும் குளுகுளுப்பும் தழுவ, வெளியில் வந்து வாங்கில் கிடந்த பேப்பரை விரித்துப் பார்த்தான்.

கண்கள் வியப்பில் பிதுங்கின.

'கொடுத்து வைத்தவன்' என முணுமுணுத் துக் கொண்டான். 'என்னை எவளாவது கடத்த மாட்டாளவையோ?'

அவன் சிந்தையில் திடீரென ஒருகாட்சி விரிந்தது. கல்லூரி ஆசிரியை ஒருத்தி, தானே காரைச் செலுத்தியபடி காலையிலும் மாலை யிலும் வீதியில் சென்று வருவதை நினைத்துக் கொண்டான்.

'ஆள் நடமாட்டமில்லாத இடத்தில், வீதி ஓரமாக நிற்க வேண்டும். அவ காரில் வருவா எனக்கு அருகில் திடீரென நிற்பாட்டுவா .. இறங்கி என்னை இழுத்துக் காரில் போடுவா நான் விருப்பமில்லாதவன் மாதிரி 'ஐயோ ஐயோ ' என்று கதற கார் என்னைத் தூக் கிக் கொண்டு பறக்கும் ..'

நினைவே இனித்தது. வேகமாகச் சொர்ண லிங்கம் படலையைத் திறந்து கொண்டு, வீதி யில் விரைந்தான்.

முருகேசரின் மனதிலும் ஐயப்பாடு ஒன்று வளரத்தொடங்கியது.

'ஒருவேளை கடத்தப்பட்ட பொடியன், பொன்னம்மா நினைக்கிற மாதிரி, கணேசனாக இருப்பானோ?'

'யாரை விசாரிப்பது?'



''நாங்கள் ரெண்டுபேரும் ஓடிப்போவம் ''

''ஓ சரி . திரும்பிவாறத்துக்கு பஸ்சுக்கு காசிருக்கோ?''

குமரகுரு – பண்ணாகம்

வழியில் கொண்டோடி கந்தையா எதிர்ப்பட்டார்.

விசயத்தைக் கேள்விப்பட்டதும், ''இருக்கும் இருக்கும்... உன்ரை பொடியனாக இருக்கும். அவன் சரியான வெக்கறை... அதுதான் அவளவை தூக்கேக்க கதறி இருக்கிறான்... வேறை பொடியள் என்றால், தாங்களாகவே காரில் பாய்ந்து ஏறிப்போயிருப்பான்கள்... உவளவை, எங்களை மாதிரி அனுபவப்பட்ட ஆக்களைக் கடத்தினால் என்ன?'' என்றார், சப்புக் கொட்டியபடி கொண்டோடி கந்தையர்.

கிராமத்தில் செய்தி வெகு வேகமாக, ஷெல் விழுந்த சங்கதிபோல பரவிவிட்டது. எல்லாரும் முருகேசரைக் கவலையோடு விசாரித்தார்கள்.

''யாழ்ப்பாணத்திலும் அடிக்கடி ஆக்கள் கடத்தப்படுவதாகச் செய்தி... உதுகளும் பொடிச்சியளாகத்தான் இருக்கும்..'' என்றார் சண்முகத்தார்.

''முருகேசு, உனக்கு இப்படி நடந்திருக்கக் கூடாது...

- மாணிக்கத்தார்.

''உழைக்கப்போன பொடியன். இப்படிப் போயிட்டானே? இனிக் கற்பழிந்த பொடியனைக் கரைசேர்க்கிறது எப்படி?'' - குஞ்சியாச்சி

மாறிமாறிக் கற்பழிச்சிருப்பாளவை. பொடியன்ரை பாடு எப்படியோ?...'' - தரகர் தம்பிப்பிள்ளை.

''பொடியன் மானமிழந்தபிறகு... தாங்காமல் தற்கொலை செய்திட்டால்?'' - கடைக்காரக் கனகர்.

இந்தச் சங்கதி, முருகேசரின் இதயத்தைப் பிழிந்தெடுத்தது.

''வெளியில்- இந்தக் கதையை விடாதை... பொடியனை நல்ல சீதனத்தோடு கரைசேர்க்க முடியாது!''

பலரின் பேச்சுக்களும் முருகேசரின் ஆழ்மனதில் நன்கு படிந்திறுகியது

கவலையோடு வீட்டிற்குத் திரும்பிவந்தரர்.

''அது நம்மடை மூத்தவன்தான்...'' என்றபடி தலையில் கைவைத்தபடி, வாங்கில் அமர்ந்தார், முருகேசர். பொன்னம்மா அக்கை மீண்டும் ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

'வீதி ஓரத்தில் நின்றிருந்த இளைஞனைக் காரில் வந்த மூன்று பெண்கள் கதறக் கதறக் கடத்திச் சென்றார்கள்...' செய்தி.

(மறுபிரசுரம்)



நான் அப்போதே சொன்னேன், பந்தை 'மின்னல்' வேகத்தில் 'கிக்' பண்ணாதே என்று. கேட்டால்தானே....

நிறையச் சாப்பாடு இருந்தும் சிறிதளவே சாப்பிட்டுத் திருப்தி அடையும் தன்மை, நீண்ட நிம்மதியான தூக்கம் இருந்தும் ஒரு சிறு ஓசையினால் விழித்துக்கொள்ளும் இயல்பு, தன் எஜமானிடம் தான் கொண்ட பிரேமையைக் காட்ட வீரதீரச் செயல்கள் புரிவது ஆகிய இந்தக் குணங்களை மனிதன் நாயிடமிருந்து கற்க வேண்டும்.

- சாணக்கிய நீதி -

நாம் இப்போது உள்ள நிலைமைக்குப் பொறுப்பாளிகள் நாம்தான். வேறு யாரும் அல்ல. எப்படி நாம் இருக்க வேண்டும் என்று நினைக்கிறோமோ அப்படி நம்மை ஆக்கிக் கொள்ளும் ஆற்றல் நம்மிடமே உள்ளது. இப்போது நாம் உள்ள நிலைக்குக் காரணம் முன்வினைப் பயனென்றால் வருங்காலத்தில் வளமான வாழ்வை அமைத்துக் கொள்ள உதவும் நல்வினைகளைச் செய்ய நாம் ஏன் தயங்க வேண்டும்?

- சுவாமி விவேகானந்தர் -

## தமிழ் ஆய்வு அறிஞர்களின் கவனத்திற்கு...

**வாசகர் மு. மகாலிங்கம் 187/11 இல்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் அவர்களின் கேள்விக்குரிய பதிலை திரு. சொக்கன் ஐயா வழங்குகிறார்.**

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது தமிழ் மூதாட்டியான ஔவையின் அருமந்தமொழி. ஆனால், எண்ணைப் பொறுத்த வரையில் அதன் தொனிப்பாங்கும் பொருளமைதியும் ஒத்திசைக்காமைக்கு, தொண்ணூறு (தொண்+நூறு), தொள்ளாயிரம் (தொள்+ஆயிரம்) என்பவற்றை எடுத்துக்காட்டலாம். ஆங்கிலத்தில் Ninety, Nine hundred என ஓர் ஒழுங்கு உண்டு. ஆனால் நூறு எண்ணிக்கைக்கு மூன்பு தொண்ணூறு (90) வருவதும், ஆயிரம் எண்ணிக்கைக்கு முன்பு தொள்ளாயிரம் (900) வருவதும் பொருத்தமாகப் படவில்லை. ஏன் இந்தச் சீர்குலைவு?

தமிழ் ஆய்வு அறிஞர்களின் கவனத்திற்கு இது உள்ளாக வில்லையா? இனியாவது கவனம் செலுத்தி இந்த ஒழுங்கீனத்தைச் சீராக்குவார்களா?

தொண்ணூறு (90), தொள்ளாயிரம் (900) மட்டுமல்ல, ஒன்பது (9) என்ற எண்கூட நீங்கள் குறிப்பது போலத் தொனி வேறுபாடு கொண்டதுதான். (ஒன் + பது = ஒன்பது) ஆகவே எமது திருத்தம் ஒன்பதிலிருந்துதான் தொடங்கவேண்டும்.

'ஒன்பது' என்ற எண்ணுக்கு முற்காலத்தில் (ஏறத்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்பு) 'தொண்டு' என்றபெயரும் வழங்கியது.

சங்கநூல்களில் ஒன்றான 'பத்துப்பாட்டில்' மலைபடுகடாம் என்பதொரு பாட்டு உண்டு. அதில் வரும் பாடலடி பின்வருவது:

தொடிதிரிவு அன்ன தொண்டுபடு திவவின்

(மலைபடுகடாம் - 21 ஆவது பாடலடி)

'வளையலை முறுக்கி விட்டதுபோன்ற ஒன்பது புரிகள் கொண்ட வார்க்கட்டு என்பது இந்தப் பாடலடிக்குப் பொருள். தொண்டு=ஒன்பது.

தமிழில் இன்று கிடைக்கும் மிகப்பழைமையான இலக்கணநூல் தொல்காப்பியம். அந்த நூலிலும் 'தொண்டு' என்னும் சொல் ஒன்பதுக்கு மாற்றீடாய் வந்துள்ளது.

'தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்(று) ஒன்பஃ தென்ப உணர்ந்திசி னோரே'

(தொல்காப்பியம் பொருள் 412)

(மேலேயுள்ள சூத்திரத்தில், தொண்டு, 'ஒன்பது' என்ற இரண்டு பெயர்களும் வந்துள்ளன)

ஆக, மாற்றவேண்டியவை இன்றுள்ளவை

1. தொண்டு - 9 (ஒன்பது)
2. தொண்பது - 90 (தொண்ணூறு)
3. தொண்ணூறு - 9,00 (தொள்ளாயிரம்)
4. தொள்ளாயிரம் - 9,000 (ஒன்பதாயிரம்)
5. தொண்பதாயிரம் - 90,000 (தொண்ணூறாயிரம்)
6. தொண்ணூறாயிரம் - 900,000 (ஒன்பதுலட்சம்)

எட்டு, எண்பது, எண்ணூறு, எண்ணாயிரம், எண்பதாயிரம், எண்ணூறாயிரம் (எட்டுலட்சம்) என்ற எண்படிக்கிரமம் போன்ற தொனிஒத்திசைவு, மேலேயுள்ள தொண்டு முதலான எண்படியேற்றத்தில் காணப்படவில்லையா?

நண்பரே, நீர் எதிர்பார்க்கும் சீராக்கத்தைச் செய்யக் கூடிய அதிகாரம் தமிழறிஞர்கள் கைகளில் இல்லை! சான்று காட்டி ஆலோசனை வழங்குவதோடு அவர்களின் கடமை முடிந்துவிட, அரசினரோ, ஒரு காலத்தில் நாமிருக்கும் நாட்டினை நமதாக்க வல்லவரோ மட்டுமே இச்சீராக்கத்தைச் செயற்படுத்தவல்லவர்கள்!

(தமிழில் எழுத்துச்சீர்திருத்தம் இடம்பெற்றது, அரசினர் வெளியிட்ட பாடநூல்களினூடாக என்பதை இவ்விடத்தில் நினைவூட்டலாம்.)

# BOSECO

*MANUFACTURER OF EXERCISE BOOKS,*
*SCHOOL PRACTICAL BOOKS, ACCOUNT BOOKS,*
*LETTER PADS, AUTOGRAPH AND DISTRIBUTORS OF*
*STATIONERIES AND PRINTER.*

3, MODERN MARKET,
HOSPITAL ROAD,
JAFFNA.

252, POINT PEDRO ROAD,
NALLUR,
JAFFNA.

# போஸ்கோ

3, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

252, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

பக்தர்:- அப்பனேசிவா, எனக்குக் காட்சி தரவா
சொர்க்கத்தை விட்டு இங்கு வந்தாய்?

சிவன்: இல்லை.. இல்லை..
குகன் ஸ்ரோர்ஸில் மளிகைச்
சாமானெல்லாம் மலிவாம்
நல்லபொருளாம் அங்கஎன்ர
மனிசி இருக்கவிடுறாளில்லை



பக்தா உனக்கு வரம் தரலாம்
குகன் ஸ்ரோர்ஸ்
விலாசத்தைக் காட்டு!

# குகன் ஸ்ரோர்ஸ்

பல்பொருள் வாணிபம்

# KUGAN STORES

180 (380), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

180 (380), Hospital Road, Jaffna.